வாராந்த சஞ்சிகை
# சுடர் ஒளி
மே 27 - ஜூன் 02 - 2015
பக்கம் 24
விலை 30/-



# தொடரும் படுகொலைகளில் இன்னொரு பலி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யானைக்கு செல்பி மோகம்...

கனடா-பிரிட்டிஷ் கொலம்பியாவை சேர்ந்த 22 வயது மாணவன் கிறிஸ்ரியன் லிபிளாங் தாய்லாந்தில் உள்ள ஹோ பன்கான் தீவிற்கு விடுமுறையில் சென்றிருந்தான்.

அங்கு தங்கியிருந்த காலத்தில் யானைகளுக்கு உணவூட்டுதல் அவைகளுடன் சேர்ந்து ஒளிப்படம் எடுத்தல் போன்ற பொழுது போக்குகளிலும் ஈடுபட்டிருந்தான்.

ஒரு நாள் யானைகளிற்கு வாழைப்பழம் தேடிச் சென்றான். அப்பொழுது அவனது உயர்-நுட்ப கம்கோடர் இயக்கத்தில் இருந்துள்ளது.

அதனால் தொடர்ந்து படங்களை எடுக்க முடியும்.யானைகளில் ஒன்று தனது துதிக்கையினால் தனது கம்கோடரை எடுத்து கண்கவர் Selfie யை பிடித்துள்ளது. லிபிளாங் போட்டோவை Instagram தளத்தில் செவ்வாய்கிழமை வெளியிட்டுள்ளான்.

யானை தனது துதிக்கையால் கமராவை எடுத்து இத்தகைய ஒரு சுய புகைப்படத்தை எடுத்திருப்பது நினைத்து பார்க்க முடியாத ஒன்று என பரவலாக பேசப்படுகின்றது.

---

# நாய்களுக்கு ஆடம்பரத் திருணம்



ஏழு ஆண்டுகளாகக் காதலித்து வந்த பக் இன நாய்களின் திருமணம் மிக ஆடம்பரமாக நடந்து முடிந்தது.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் ஜாஸ்மினுக்கும் ஜாஸ்பருக்கும் மிக ஆடம்பரமாகத் திருமணம் நடந்து முடிந்திருக்கிறது. பக் இன நாய்களான ஜாஸ்மினும் ஜாஸ்பரும் கடந்த 7 ஆண்டுகளாகக் காதலித்து வந்தன.

அதிக விலையில் தைக்கப்பட்ட திருமண ஆடை ஜாஸ்மினுக்கு அணியப்பட்டது. இந்தத் திருமணத்துக்கு 300 பேர் வந்திருந்தனர்.



மனிதர்களின் திருமணங்களைப் போலவே இந்தத் திருமணத்திலும் திருமண கேக் வெட்டப்பட்டது. விருந்தும் நடைபெற்றது.

திருமணத்தில் கலந்துகொள்பவர்களுக்கு ஒன்லைனில் டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. தங்களின் செல்லப்பிராணிகளுக்கு அலங்காரமான ஆடைகளை அணிவித்து திருமணத்துக்கு அழைத்து வந்திருந்தனர்.

திருமணத்தின் மூலம் கிடைத்த பரிசுப் பொருட்கள், நன்கொடைகள் அனைத்தும் விக்டோரியா நாய்கள் பாதுகாப்பு அமைப்புக்கு வழங்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றத்தில்



ஆசாத்

# சம்பூர் - முசலி

> ஆனால் மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், சிலாவற்றுறை ஆகிய பகுதிகளில் முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த காணிகள் இராணுவத்தாலும், கடற்படையினராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. அதே வேளை மறிச்சுக்கட்டியில் தமது பாரம்பரியக் காணிகளில் முஸ்லிம்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டமையை எதிர்த்துப் பொதுபலசேன கடும் வன்முறைகளை மேற்கொண்டது.

**1990** ஆண்டில் வடபகுதியை விட்டு முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டபோது அவர்கள் மன்னார் மாவட்டத்தை விட்டு இடம்பெயர்ந்து புத்தளம் உட்படப் பல இடங்களிலும் குடியேறினார். குறிப்பாக முஸ்லிம் மக்கள் பெரும் பான்மையாக வாழ்ந்த முசலி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மறிச்சுக்கட்டி, சிலாவத்துறை ஆகிய இடங்களிலிருந்து வெளியேறினார். அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண்ணை விட்டுப் பிரியும் அவலம் நேர்ந்தது.

இதே போன்று 2006 ஆண்டு திருமலை, மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த சம்பூர் மக்கள் உட்பட மூதூர் கிழக்கு கிராமங்களில் உள்ள மக்கள் தங்கள் பாரம்பரிய மண்ணை விட்டு விரட்டப் பட்டனர். ஒவ்வொரு இடமாக விரட்டப்பட்ட அவர்கள் வாகரைக்குள் ஒரு பெரும் இராணுவ முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டுக் கொன்று குவிக்கப் பட்டனர். எஞ்சியோர் மட்டக்களப்பில் வெவ்வேறு பிரதேசங்களிலும் அகதிகளாக வாழ்ந்தனர். கிழக்கு மாகாணம் முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்ட பின்பு அவர்கள் மீண்டும் தங்கள் மண்ணுக்குக் திரும்பினர். ஆனால் அவர்கள் தமது சொந்த மண்ணில் குடியேற அனுமதிக்கப்படாத நிலையில் கிளிவெட்டி, பட்டித்திடல், கட்டைப்பறிச்சான் ஆகிய பகுதிகளில் அகதி முகாம்களில் குடியேற்றப்பட்டனர்.

அந்த மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் குடியேற அனுமதிக்கப் படாத நிலையில் அவர்களை வேறு இடங்களில் குடியேற்ற அரசாங்கத்தால் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் அந்த மக்கள் அரசினால் காட்டப்பட்ட காணிகளில் குடியேற மறுத்து, தங்கள் சொந்தக் காணிகளில் தம்மைக் குடியேற்றும் படி கோரி, அகதி முகாம்களில் பல இன்னல்கள் மத்தியிலும் தங்கியிருந்தனர். அந்த நிலையில் அரச விருப்பப்படி குடியேற மறுத்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது கூட நிறுத்தப்பட்டது. எனினும் சம்பூர் மக்கள் தங்கள் கோரிக்கையில் மிகவும் உறுதியாக இருந்தனர். அது மட்டுமன்றி அவர்கள் தங்களைத் தங்கள் சொந்தக் காணிகளில் குடியேற்றும் படி பல போராட்டங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தனர். அதில் ஒரு கட்டமாக தங்கள் காணிகளை மீளப் பெறும் நோக்கில் உயர் நீதிமன்றில் வழக்கையும் தொடுத்திருந்தனர்.

அந்த மக்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாத மஹிந்த ராஜபக் ஷ அரசாங்கம் அந்தப்பகுதியில் ஒரு அனல் மின்நிலையம், இயந்திர உதிரிப்பாகங்கள் செய்யும் தொழிற்சாலை என்பனவற்றை அமைப்பதற்காக அந்தப் பிரதேசம் ஒரு வர்த்தமானி பிரகடனம் மூலம் முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்கு வழங்கப்பட்டது. அந்தக் காணிகளில் ஒரு பகுதி அரச முதலீட்டுச் சபையால் லங்கா கேற்வே என்ற நிறுவனத்துக்கு தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

எனினும் மக்கள் தங்கள் கோரிக்கையில் உறுதியாக இருந்து அகதி முகாம்களில் பல இன்னல்களையும் நெருக்கடிகளை யும் அனுபவித்த போதும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வந்தனர்.

இப்படியான உறுதியானதும், தொடர்ச்சியானதுமான போராட்டங்கள் காரணமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு ஏற்கனவே இந்தக் காணிகள் தொடர்பாக விடுக்கப்பட்ட முதலீட்டு சபைக்கு வழங்கும் முன்னைய வர்த்தமானி அறிவித் தல் ஜனாதிபதியால் ரத்துச் செய்யப்பட்டு அந்தக் காணிகளில் அந்த மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் லங்கா கேற்வே நிறுவனம் உயர்நீதிமன்றில் சமர்ப்பித்த மனுவை அடுத்து மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனினும் இடைக்காலத்தடை உத்தரவை எதிர்த்து மக்கள் உடனடியாகவே போராட்டத்தில் இறங்கினர். ஒரு இளைஞன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினர். மக்களும் கிளிவெட்டி, பட்டித்திடல் ,கட்டைப்பறிச்சான் ஆகிய இடங்களில் உண்ணாவிரதப் போராட்டங்களில் இறங்கினர்.



தற்சமயம் உச்ச நீதிமன்றம் இடைக்காலத்தடையை இரத்துச் செய்து விட்டது. இனி சம்பூரில் மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படும் நிலை தொடங்கப்படவுள்ளது.

அரசாங்கம் இந்த மக்களை ஏமாற்றி வேறு இடங்களில் குடியேற்ற நடவடிக்கைகளில் ஏமாந்து போகாமல் தாங்கள் தமது சொந்தக் காணியிலேயே குடியேற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தமையே அவர்களின் இந்த வெற்றிக்குக் காரணம் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

அதே வேளையில் 1990இல் இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களையும் மீள் குடியேற்றம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

ஆனால் மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், சிலாவற்றுறை ஆகிய பகுதிகளில் முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த காணிகள் இராணுவத்தாலும், கடற்படையினராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. அதே வேளை மறிச்சுக்கட்டியில் தமது பாரம்பரியக் காணிகளில் முஸ்லிம்கள் மீள்குடியேற்றம் செய்யப் பட்டமையை எதிர்த்துப் பொதுபல சேன கடும் வன்முறைகளை மேற்கொண்டது.

இப்படியான ஒரு நிலையில் ஜனாதிபதி செயலணியால் சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணிகளில் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் குடியேற்றப்பட்டனர்.

தற்சமயம் சுற்றுச்சூழல் அமைப்புக்களும், சிங்களக்கடும் போக்கு அமைப்புக்களும் இந்தக் குடியேற்றங்களுக்கும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. வனபரிபாலன திணைக்களமும் இந்தப்பகுதி வில்பத்து சரணாலயத்துக்குச் சொந்தமானது எனத் தெரிவித்துள்ளது. தொல்பொருள் திணைக்களமும் இந்தக் குடியேற்றங்கள் தொடர்பாக எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா இந்தக் குடியேற்றங்கள் தொடர்பாக பாரபட்சமற்ற விசார ணை நடத்தி உரிய நடவடிக் கை களை மேற்கொள்ளும் படி பணித்துள்ளார்.

இதில் கவனத்தில் எடுக்கப்பட வேண் டிய விடயம் முஸ்லிம் மக்கள் படையினரால் ஆக்கிரமிக்கப் பட்ட தமது சொந்தக் காணிகளை விடுவி க் கக் கோரி போராட்ட ங்களை நடத்தாமல், முன்னைய அரசாங்கம் காட்டிய இடங்களில் குடியேறியிருந்த னர். இப்போ சொந்தக் காணிகளையும் இழந்தது மட்டு மன்றி குடியேறிய காணிகளுக் கும் ஆபத்து ஏற்பட்டு விட்டது.

ஆனால் சம்பூர் மக்களை வேறு இடங்களில் குடியேற்ற முயன்ற போது அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து போராட்டங்களை நடத்தி னர். இன்று சொந்தக் காணிகளில் மீள்குடியே றும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

முஸ்லிம் மக்கள் தங்கள், சொந்தக் காணிகள் பற்றி உறுதியாக இருந்தால் காலம் கடந்தாலும் வெற்றி பெற முடியும் என்பதை முஸ்லிம் மக்கள் சம்பூர் மக்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். சுயநல அரசியல் வாதிகளின் பின்னால் இழுபட்டால் நடுத் தெருவில் நிற்கவேண்டிய நிலையே ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்து கொண்டிருக்கின்றது எண்ணெய்ப் பூமி 4

எஸ்.ஜே.பிரசாத்



...ture alliance/ZUMA Press/M. Dairieh

தீவிரவாதம் என்று எதனைச் சொல்வது என்பதை முடிவு செய்துவிடவேண்டும். காரணம் ஈராக்கில் நடப்பது தீவிரவாதச் செயலா என்பது ஒரு பெரிய கேள்விக்குறி.

எழுத்தாளர் பா.ராகவன் இந்த தீவிரவாதம் பற்றி இப்படி விவரிக்கிறார்.

இந்தச் சொல், முதன் முதலில் பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற வேளையில் சமயத்தில், அதாவது 1793ஆம் ஆண்டு காலகட்டத்தில் தோன்றியிருக்கிறது. இது புரட்சியின் காலம் என்றுதான் அர்த்தமாகிறது.

இதிலிருந்துதான் 'ரெரர்' என்கிற ஆங்கிலச் சொல் உதித்தது. மன்னராட்சி ஒழியவேண்டும் என்று நினைப்பதே அக்காலத்தில் புரட்சிகரமல்லவா?

தவிர, நியாயமும்கூட. ஊரை அடித்து உலையில் போட்டு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொழுத்த மன்னர்களை ஒழித்துவிட்டு, மக்களாட்சியைக் கொண்டுவர நினைத்ததைத் தப்பென்று சொல்லிவிடமுடியாது.

...ல் எல்லா புரட்சிகளும் ...த்தில் நசுக்கப்படுவதுதான் ...என்பதற்கேற்ப, ...லைமுறை பிரெஞ்சுப் ...யாளர்களும் தோல்வியடையவே ...செய்தார்கள்.

புரட்சியாளர்கள் கொல்லப்பட்டாலும் அவர்களது துணிச்சலும் தீவிரமும் சரித்திரத்தில் நிலைத்துவிட்டது.

'ரெரர்' என்கிற அந்தச் சொல்லைப் போலவே, மிக நல்ல அர்த்தத்தில் வைக்கப்பட்ட அந்தப் பெயரை, அதற்குப் பின்னால் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் அத்தனை பேருக்கும் உரிய பெயராக்கிவிட்டார்கள்.

ஐரோப்பா முழுதும் எங்கெல்லாம் மன்னராட்சிக்கு எதிராக மக்கள் குரல் கொடுக்கிறார்களோ, அவர்களை எல்லாம் பயங்கரவாதிகள் என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

பின்னர் கம்யூனிசம் தோன்றி, பரவி, சித்தாந்த பலத்துடன் புரட்சி ஒரு புதுப் பரிமாணமெடுத்து சோவியத் ரஷ்யாவில் மையம் கொண்டபோது, கம்யூனிஸ்டுகள் எல்லோரும் தீவிரவாதிகள் என்று, அப்போது ரஷ்யாவை ஆண்டுகொண்டிருந்த ஜோர்ஜ் மன்னர் அறிவித்தார்.

உலகின் முதல் மக்களாட்சி தேசம் என்கிற பெருமை கொண்ட அமெரிக்கா, இது விஷயத்தில் அப்போது வாய்மூடி இருந்தது.

இத்தனைக்கும் அமெரிக்கா அப்போது அத்தனை தீவிர கம்யூனிச எதிர்ப்பு தேசமென்று இல்லை.

சொல்லப்போனால் கம்யூனிசம் அப்போது அமெரிக்கா பக்கம் கப்பல் ஏறி வந்திருக்கவே இல்லை. வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

எப்படியானாலும் எதேச்சாதிகாரத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள், தீவிரவாதிகள். இதுதான் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகள் வரைக்குமான நிலைமை. இதனையே இன்றைய ஹைடெக் தீவிரவாதிகள் தமக்குச் சாதகமான வாதமாக, இன்றுவரை உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போர். ஆதிக்க சக்திகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டம். அடக்குமுறைக்கு எதிராக வந்த யுத்தம்.

ஆனால் இவர்கள் யோசிக்கத் தவறும் விஷயம், பிரெஞ்சுப் புரட்சியின்போதோ, ரஷ்யப் புரட்சியின்போதோ, புரட்சியின் நோக்கம் மக்களாட்சி என்பதாக மட்டுமே இருந்தது என்பதுதான்!

தவிரவும், இந்தப் புரட்சியாளர்கள் முடியாட்சிக்கு எதிராக, அமைதியான வழியில் மட்டுமே போராட்டத்தைத் தொடங்கினார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

போராட்டத்தின் உச்சகட்டக் காட்சிகள் மட்டுமே நேரடி யுத்தமாக இருந்தன. போராட்டத்தில் எந்தப் பொதுச்சொத்தும் சேதமானதில்லை என்பதும், அப்பாவி மக்கள் பலிகடாக்களாக்கப்பட்டதில்லை என்பதும், கொடூரமான கொலைவெறிக் காட்சிகள் தினத்துக்கு ஒன்றாக அரங்கேறியதில்லை என்பதும் இதன் பின்னிணைப்புகள்.

புரட்சி என்ற சொல்லின் அர்த்தமே மாறிவிட்ட காலகட்டத்தில், தீவிரவாதத்தின் பாடு குறித்துச் சொல்லவேண்டாம். அந்தக் காலத்தில் புரட்சியாளர்கள், மக்களின் ஆசியுடன், மக்கள் மத்தியிலிருந்தே தோன்றினார்கள்.

இன்றைய தீவிரவாதிகள் உருவாகக் காரணமாக, சமூக விஞ்ஞானிகள் முன்வைக்கும் காரணங்களைப் பார்த்தால் மூச்சு முட்டும். ஏழ்மை. கல்வியின்மை. பசி. இவற்றின் மீது ரகசியமாக ஏற்றப்படும் மதவெறி என்கிற விஷ ஊசி.

இதன் விளைவாகப் பீறிடும் கோபத்தை அரசியல் லாபங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் சாமர்த்தியம்.

> புரட்சி என்ற சொல்லின் அர்த்தமே மாறிவிட்ட காலகட்டத்தில், தீவிரவாதத்தின் பாடு குறித்துச் சொல்லவேண்டாம். அந்தக் காலத்தில் புரட்சி யாளர்கள், மக்களின் ஆசியுடன், மக்கள் மத்தியி லிருந்தே தோன்றினார்கள்.
>
> இன்றைய தீவிரவாதிகள் உருவாகக் காரண மாக, சமூக விஞ்ஞானிகள் முன்வைக்கும் கார ணங்களைப் பார்த்தால் மூச்சு முட்டும். ஏழ்மை. கல்வியின்மை. பசி. இவற்றின் மீது ரகசியமாக ஏற்றப்படும் மதவெறி என்கிற விஷ ஊசி.
>
> அதன் விளைவாகப் பீறிடும் கோபத்தை அரசியல் லாபங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் சாமர்த்தியம்.

இந்தக் கோபம், எங்கெங்கோ மூலைகளில் எத்தனையோ பல தனிமனிதர்களுக்கு உருவாகுவதாகவே இருந்தாலும், இதனை ஒன்று சேர்ப்பது பெரிய விஷயமல்ல என்கிறார்கள் உளவியல் வல்லுநர்கள்.

அந்தக் காரியத்தைத்தான் ஒசாமா பின்லேடன் போன்ற தீவிரவாத தலைவர்கள் திறம்படச் செய்துகொண்டிருந்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன், நல்ல ஆள் பலம், ஆயுத பலங்களுடன் திட்டமிட்டு அரசுகளுடன் யுத்தம் புரியும் அமைப்புகளைத்தான் தீவிரவாத இயக்கங்களாகக் கருதவேண்டியிருக்கிறது.

அரசுகளுடன் யுத்தம் புரிவதாகச் சொல்வார்களே தவிர, இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுவது பொதுமக்களாகத் தான் இருப்பார்கள். ஆனால், இயக்கங்களுக்கு அது குறித்தெல்லாம் கிஞ்சித்தும் கவலை கிடையாது. பொதுமக்களும் அரசுகளின் ஓரங்கம்தானே? வரி கட்டுகிறார்களல்லவா? சாகட்டும்.

இரண்டு உலகப்போர்கள் நடந்துமுடிந்து, பெரும்பாலான மேற்கத்திய நாடுகளும் சில கீழை நாடுகளும் நொந்து நூலாகிப் போன காலத்திலேயே, தீவிரவாதம் தன்னுடைய அடுத்த அவதாரத்தை எடுத்தது.

பல மன்னராட்சி நாடுகளில் யுத்தத்துக்குப் பிறகு ஜனநாயகம் வந்துவிட்டது. மக்கள் வரிசையில் நின்று ஓட்டுப் போடும் கண்கொள்ளாக் காட்சியைப் பரவலாகப் பார்க்க முடிந்தது.

குறிப்பாக, ஐரோப்பாவில். ஜனநாயகத்தின் சௌகரியங்கள் மக்களுக்கு அனுபவபூர்வமாகப் புரிந்துவிட்ட பிறகு, பழைய மகாராஜாக்கள் எல்லோரும் சமர்த்தாக

(18 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புருஜோத்தமன் தங்கமயில்

# பூகோள அரசியலில் தமிழர்கள்



பூகோள அரசியலை தமிழ் மக்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணப்பாடு அரசியல் உரிமைப் போராட்டங்கள் ஆரம்பித்த காலம் தொட்டு இருந்து வருகின்றது.

ஆனால், பூகோள அரசியலில் பிரதான கருவிகளில் ஒன்றாக கையாளப்பட்டு வந்துள்ள தமிழ் மக்கள், கருவி நிலையிலிருந்து அடுத்த கட்டம் நோக்கி நகர்வதற்கான முயற்சிகளை பெருமளவில் மேற்கொண்டதில்லை; அல்லது அப்படியான முயற்சிகளை பிராந்திய வல்லரசு உள்ளிட்ட பூகோள அரசியலை தீர்மானிக்கும் சக்திகள் அனுமதித்தது இல்லை.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டங்களின் எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் பூகோள அரசியல் மாற்றங்களும், போக்கும் சம்பந்தப்பட்டு வந்திருக்கின்றன. அது, எந்த வித்தியாசமும் இன்றி அஹிம்சை வழிப் போராட்டங்களிலும், ஆயுத வழிப் போராட்டங்களிலும் தாக்கம் செலுத்தியிருக்கின்றன.

எந்த வழிமுறைப் போராட்டங்களாக இருந்தாலும், தமிழ் மக்கள் குறிப்பிட்டளவு அர்ப்பணிப்போடு போராடி வந்திருக்கின்றார்கள். அந்த அர்ப்பணிப்பை விமர்சனத்துக்கு உள்ளாக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், தம்மை சுற்றியுள்ள வலை தொடர்பில் அதிக தருணங்களில் தமிழ் மக்கள் புரிந்து கொண்டதில்லை. அதுதான், ஆங்காங்கு சிக்க வைத்திருக்கின்றது. அதில், முள்ளிவாய்க்கால் பேரழிவு என்றைக்குமே மறக்க முடியாத பாடம்.

கடந்த வாரம் (மே 15, 2015) யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் இடையில் அரசியல் விவாதமொன்று இடம்பெற்றது.

விவாத ஒழுங்கமைப்பு, பார்வையாளர்கள் மத்தியில் வெளிப்பட்ட அதீத உணர்ச்சிவசப் படல்கள், கேள்விகளில் தெளிவின்மை உள்ளிட்ட விடயங்கள் குறித்த விவாதத்தின் குறைபாடுகளாக இருந்தாலும், கருத்தியல் ரீதியான விவாதமொன்றை ஆரம்பித்து வைத்தமை தொடர்பில் கவனம் பெற்றது.

அந்த விவாதத்தின் போது, எம்.ஏ.சுமந்திரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமிழ் மக்கள் பூகோள அரசியல் போக்கினை உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும் என்கிற எண்ணத்தினை வெளிப்படுத்தினார்கள்.

ஆனால், அதன் அணுகுமுறை தொடர்பிலேயே வேறுபாட்டினைக் காட்டினார்கள். (ஒட்டுமொத்த விவாதத்திலும் பெருமளவு கொள்கை- கோட்பாட்டியல்(!) ரீதியாக ஒரே புள்ளியிலேயே இருவரும் விவாதித்தார்கள். அணுகுமுறையில் தான் சிறிய மாற்றம் இருந்தது.)

இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் சார்பு நிலையிலிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குறுதிகளைப் பெற்றுக் கொள்ளவில்லை என்கிற குற்றச்சாட்டை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பலமாக முன்வைத்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தமிழ் மக்கள் மத்தியிலும் இருக்கத்தான் செய்கின்றது. சீனா சார்பு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அப்போதைய அரசாங்கம், தமிழ் மக்களை கடும்போக்கில் கையாண்டு வந்த நிலையில், அதனை மாற்றுவதற்கான தேவை இருந்தது என்று எம்.ஏ.சுமந்திரன் வாதிட்டார்.

அதுதான், தமிழ் மக்களை பெருமெடுப்பில் வாக்களிக்க வைக்கவும் காரணமாகவும் இருந்தது.

1990களின் இறுதியிலும், 2000களின் ஆரம்பத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத போராட்ட ரீதியில் பெற்று வந்த வெற்றிகள் இலங்கை அரசினை மட்டுமல்ல, பிராந்திய வல்லரசான இந்தியாவையும் பெருமளவு அச்சுறுத்தின.

அந்த அச்சுறுத்தலின் அளவினை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளும் உணர்ந்து கொண்டன. அதுவும், விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கான நிகழ்ச்சி நிரலினை வேகம் பெற வைத்தன.

தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்று வந்தாலும், ஆயுதப் போராட்டக்களம் நீண்டு செல்லும் போது ஏற்படும் களைப்பு அதிகமானது. அந்தக் களைப்பும், மேற்கு நாடுகளின் அழுத்தங்களும் இணைந்து விடுதலைப் புலிகளை 2002இல் போர் நிறுத்தத்துக்கு இணங்க வைத்தது.

போர் நிறுத்தமும், தொடர்ந்து வந்த சமாதானப் பேச்சுவார்த்தைக் காலமும் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை பலமிழக்கச் செய்வதற்கான கால இடைவெளியாக கையாளப்பட்டது. அதனை விடுதலைப் புலிகளோ, அவர்களின் ஆதரவு சக்திகளோ உணராமல் இல்லை. ஆனாலும், தவிர்க்க முடியாத நிலையில் சிக்கிக் கொண்டார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் போக்கில் இணக்கப்பாட்டுக்கு விடுதலைப் புலிகள் வந்திருந்தாலும் கூட, அவர்கள் வேறொரு வடிவில் போராட்டக் களத்திலிருந்து அகற்றப்பட்டிருப்பார்கள் என்பது வேறுவிடயம்.

ஆனால், அதற்கான வாய்ப்பை வழங்காமல் மீண்டும் ஆயுதப் போராட்டம் எனும் விடயத்தினை தெரிவு செய்ததன் மூலம், குறுகிய காலத்துக்குள் விடுதலைப் புலிகள் தமிழ் போராட்ட அரங்கிலிருந்து முற்றுமுழுதாக அகற்றப்பட்டார்கள்.

குறிப்பாக, 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை வெற்றிபெற வைக்க வேண்டும் என்று இந்தியாவும், மேற்கு நாடுகளும் விரும்பின. ஆனால், அதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கு விடுதலைப் புலிகள் இணங்கவில்லை.

மாறாக, தமிழ் மக்கள் வாக்களிப்பைப் புறக்கணிக்க வேண்டும் என்கிற கோரிக்கை, சீனா சார்பு மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சிபீடமேற்றியது. தங்களினால் ரசிக்க முடியாத ஒருவர் ஆட்சிபீடமேற்றப்பட்டது இந்தியாவுக்கும்,

**பூகோள அரசியலில் பிரதான கருவிகளில் ஒன்றாக கையாளப்பட்டு வந்துள்ள தமிழ் மக்கள், கருவி நிலையிலிருந்து அடுத்த கட்டம் நோக்கி நகர்வதற்கான முயற்சிகளை பெருமளவில் மேற்கொண்டதில்லை அல்லது, அப்படியான முயற்சிகளை பிராந்திய வல்லரசு உள்ளிட்ட பூகோள அரசியலை தீர்மானிக்கும் சக்திகள் அனுமதித்தது இல்லை.**

(18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# மக்கள் நலன் நாடிய வரவேற்க வல்ல தடை

புற்கள் மற்றும் களைகளை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படும் 'க்லைபொசேட்' (Glyphosate) என்ற களை நாசனி வகையை விற்பனை செய்வதற்கோ, இறக்குமதி செய்வதற்கோ முற்றாகத் தடை விதித்துள்ளது அரசு.

மேற்குறிப்பிட்ட களைநாசினி, நாட்டில் பரந்த அளவில் பயன்படுத்தப்படுவதால், சிறுநீரக நோய் அதிக அளவில் மக்களைத் தாக்குவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப் பட்டுள்ளது. அதனைக் கருத்தில் கொண்டே அதன் பாவனைக்குத்தடை விதிப்பதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன சுட்டிக்காட்டி உள்ளார்.

'க்லைபொசேட்' களைநாசினி விளைவிக்கும் பாதிப்புகளை எடுத்துக்காட்டி அதன் இறக்குமதியைத் தடை செய்யுமாறு முந்தைய ஆட்சிபீடத்தினரிடம் பலபல தடைவைகள் எடுத்துக்கூறியும், அவர்கள் அதனைக் கருத்தில் கொள்ளாமல் தட்டிக்கழித்தனர். இந்த விவரத்தையும் நாட்டின் தலைவரே சுட்டிக்காட்டினார், கவலை தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட களைநாசனி யாழ்ப்பாண மாவட்டத்திலும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது.இது கவலை தரும் ஒன்றாகும்.

இதன் மத்தியில், எமது நாட்டில் எழுபது சத வீதமானோர், தொற்றா நோய்களின் காரணமாகவே மரணிக்கின்றார்கள் என்ற தரவு பெரும் பாரதூரமான நிலையாகும்.

மேற்கண்ட தரவை, சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன வெளிப்படுத்தி உள்ளார்.

இப்போது ஜெனீவாவில் நடைபெறும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த மாநாட்டில் அதனை அவர் எடுத்துரைத்தார்.

மக்களின் வாழ்க்கை முறைகள் மற்றும் உணவுப் பழக்கங்களினாலும், பலவகைசார் தொற்றா நோய்களின் பாதிப்புகள் அதிகரித்தும் உயர்ந்தும் வருகின்றன. அதனைப் புள்ளி விபரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இப்பொழுதெல்லாம் இரசாயான மூலங்களால் உற்பத்தி செய்யப்படும் உர வகைகளின் பாவனை, விவசாயத்தில் பிரதான பங்கு வகிப்பதால், பாதிப்பு எதனையும் விளைவிக்காத சேதனப்பசளையின் பயன்பாடு மிகப் பெரிய அளவில் குறைந்துவிட்டது, தேய்ந்துபோயிற்று.

அதனால், நகரம், பட்டினம், கிராமம் என்று எல்லாப் பிரதேசங்களிலும், வீதிகள் தோறும் குப்பை கூழங்கள் கிடந்து அங்கு வாழும் மக்களின் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கின்றன.

அதனை உணர்ந்து, உள்வாங்கி, திருநெல்வேலி விவசாயப் பண்ணையில், வெள்ளிக்கிழமை தோறும், களை நாசினி மற்றம் பூச்சி கொல்லி மருந்து எதுவும் விசிறப்படாது பயிரிடப்பட்ட மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

வரவேற்கத்தக்க இந்த முன்னுதாரணம் ஏனைய பிரதேசங்கள், பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டால் -

சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் போன்ற மரணத்தைத் தரும் வியாதிகளில் இருந்து தப்பி, மக்கள் சுகவாழ்வை அனுபவிக்க வாய்ப்பு மேலெழும்.

**- அக்கினிக்குமரன்**

போர் முடிவடைந்த பின்பு தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் தண்டிக்கப்படாத படுகொலைகளும், பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களும் வடபகுதியில் ஒரு பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன. இச் சம்பவங்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்படாத நிலைமையும், கைது செய்யப்படுவர்கள் பிணையில் விடப்பட்டுச் சுதந்திரமாக நடமாடித் திரிவதும் இக்கொலைகளின் பின்னால் சக்தி மிக்க கரங்கள் இருப்பதையே சந்தேகமற்ற வகையில் உணர்த்தி வருகின்றன.

அத்தகைய படுகொலைகளில் ஒன்றாகவே அண்மையில் புங்குடு தீவைச் சேர்ந்த உயர்தர மாணவி கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் என்று கருதப்பட வேண்டியுள்ளது.

இந்தக்கொலை தொடர்பான சந்தேக நபர் ஒருவர் ஒருகொள்ளையில் ஈடுபட்டவர்

முன்னாள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவும் அவரும் சேர்ந்து எடுத்த புகைப்படத்தை யும் ஒரு இணையத்தளம் பிரசுரித்துள் ளது. எனவே அவர் அரசியல் ரீதியான தொடர்புகளைக் கொண்டவர் என்பது ஊர்ஜிதமாகியுள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற தொடர் கொள்ளைகளுக்குப் பின்னால் வலிமை மிக்க சில அரசியல் சக்திகள் இருந்தன என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது.

அது மட்டுமன்றி சங்கானைப் பூசகர் கொலை, உரும்பிராய் உதவிக்கல்விப்பணிப்பாளர் கொலை, சாவகச்சேரி பல்கலைக்கழக மாணவன் கபில்நாத் படுகொலை போன்ற சம்பவங்கள் சில சக்தி மிக்க நபர்களின் ஆதரவாலேயே மேற்கொள்ளப்பட்டன என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது.

குறிப்பாக உரும்பிராய் உதவிக் கல்விப்பணிப்பாளர் கொலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும்,




எனவும், அவருக்கு எதிராக மாணவியின் தாயார் சாட்சி சொன்ன காரணத்தால் பழிவாங்கும் முகமாகவே இந்தக் கொலை மேற்கொள்ளப்பட் டதாகவும் கூறப்படுகிறது. இதில்

வெகுவிரைவில் பெயர்களை வெளியிடப் போவதாகவும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா சூளுரைத்திருந்தார். அவர் இன்றுவரை பெயர்களை வெளிவிடவில்லை. மேலும் கபில்நாத் கொலையில் சந்தேக நபரான ஈ.பி.டி.பி. வேட்பாளருக்கு பிணை வழங்க நீதிபதி

**போர் முடிவடைந்த பின்பு தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் தண்டிக்கப்படாத படுகொலைகளும், பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களும் வடபகுதியில் ஒரு பயங்கர மான சூழ்நிலையை ஏற்படுத்தியுள் ளன. இச் சம்பவங்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்படாத நிலைமையும், கைது செய்யப்படுவர்கள் பிணையில் விடப்பட்டுச் சுதந்திரமாக நடமாடித் திரிவதும் இக்கொலைகளின் பின் னால் சக்தி மிக்க கரங்கள் இருப்பதையே சந்தேகமற்ற வகையில் உணர்த்தி வருகின்றன.**

சம்பந்தப்பட்ட சுவிஸ்நாட்டில் வசிப்பவரான குமார் என்பவர் ஈ.பி.டி.பியின் வெளிநாட்டுத் தொடர்பாளர் எனத்தகவல் வெளியிடப்பட்டுள்ளதுடன்,

மறுத்தபோது அவர் இடமாற்றம்செய்யப்பட்டதை நாம் மறந்துவிடமுடியுமா?

இத்தகைய நிலையில் புங்குடுதீவு மாணவியின் படுகொலைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பின்னணி இருந்திருக்கக் கூடும் எனவும் சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகும்.


எனவே, மாணவியின் படுகொலை தொடர்பாக நேர்மையான, நியாயமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டு மென்றும், சம்பந்தப்பட்டவர்களுக்கு உயர்ந்த பட்சத் தண்டனை வழங்கப்பட வேண்டுமெனவும் வலுவான கோரிக்கைகள் மக்கள் மத்தியில் எழுந்தன. எனவே வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் கூட நீதி கோரி ஜனநாயக வழியிலான போராட்டங்கள் எழுச்சிபெற்றன. மாணவர்கள், பல்கலைக்கழக சமூகம், வணிசமூகம், பொதுநிறுவனங்கள் எனச் சகல தரப்பினருமே வீதிகளில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணக் குடாநாடே ஸ்தம்பிக்கும் அளவுக்கு ஹர்த்தாலும், ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

ஆனால், இத்தகைய நியாயமான போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவும் திசை திருப்பவும் சில விஷமிகள் இந்தப் போராட்டங்களில் களமிறங்கியிருக் கின்றன.

ஏற்கனவே மக்கள் தீவிரமாகப் போராட்டத்தில் இறங்கிய போதிலும் கூட விஷமிகள் குழு கடைகளையும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களையும் மூடும்படி வன்முறை மிரட்டல்களில் இறங்கின. அது மட்டுமன்றி சில இடங்களில் இடம்பெற்ற போராட்டங்களுக்குள் புகுந்து கொலைச் சந்தேக நபர்களைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எந்தவிதத்திலும் சாத்தியமற்ற கோஷங்களை எழுப்பி, அதற்கு வன்முறை வடிவம் கொடுக்கும் வகையில் செயல்களில் இறங்கினர்.

கடந்த புதன்கிழமை கடைகள் உட்பட சகல நிறுவனங்களும் பூட்டப்பட்டுப் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டு யாழ்.குடாநாடெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. மாணவர்கள், ஆசிரிய அமைப்புக்கள், வணிகர் அமைப்புகள் உள்ளிட்ட பல அமைப்புகள் ஊர்வலங்களை நடத்தி யாழ். செயலகத்தில் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தேசிய இளைஞர் மன்றத்தினர் தமது போராட்டத்தை யாழ். பொதுநூலகத்தில் நடத்தினர்.

ஆனால், யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் முன் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்குள் இந்தத் தீய சக்திகள் புகுந்து கொண்டன. கொலைச் சந்தேக நபர்களை தங்களிடம் ஒப்படைக்கும்படி கோஷங்களை எழுப்பியதுடன், பொலிஸாரின் தடைகளை உடைத்து உட்புகுந்தனர். நீதிமன்றத்தின் மீது கல்வீச்சு நடத்தப்பட்டு கண்ணாடிகள் நொருக்கப்பட்டன. சிறைச்சாலை வாகனம் உட்பட பல வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. இந்த நிலையில் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டு 130 பேரைக் கைதுசெய்தனர். அவர்கள் அனுராதபுரம் சிறைச்சாலைகளுக்கு விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டனர். சட்டத்தரணிகள் இவர்களுக்குச் சார்பாக ஆஜராக மறுத்துவிட்டனர்.




**யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் முன் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்குள் இந்தத் தீய சக்திகள் புகுந்து கொண்டன. கொலைச் சந்தேக நபர்களை தங்களிடம் ஒப்படைக்கும்படி கோஷங்களை எழுப்பியதுடன், பொலிஸாரின் தடைகளை உடைத்து உட்புகுந்தனர். நீதிமன்றத்தின் மீது கல்வீச்சு நடத்தப்பட்டு கண்ணாடிகள் நொருக்கப்பட்டன. சிறைச்சாலை வாகனம் உட்பட பல வாகனங்கள் சேதப்படுத்தப் பட்டன. இந்த நிலையில் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டு 130 பேரைக் கைதுசெய்தனர்.**



ஒரு நியாயமான போராட்டத்தை ஒரு சில சக்திகளால் திட்டமிட்டு வன்முறையாக்கப்பட்டு கொச்சைப்படுத்தப்பட்டு விட்டது. அது மட்டுமன்றி மக்களுக்கு எதிராகவும் மக்கள் போராட்டங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப் பொலிஸாருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவில் சந்தேக நபர்களின் வீடுகள் அங்கு வன்முறையாளர்களால் எரிக்கப்பட்டுவிட்டன. பொலிஸார் கொலை சம்பந்தமான சில தடயங்களைத் தேடி சந்தேச நபர்களின் வீடுகளுக்குப் போனபோது அவை எரிக்கப்பட்டு விட்டதால் தடயங்கள் அழிக்கப்பட்டு விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளையில் நீதிமன்ற வன்முறைகள் பற்றி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்படித்தான் புலிகள் ஊடுருவுவார்கள் எனவும் இதற்கு எதிராக எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். அதாவது வடக்கினை மீண்டும் இராணுவக் கெடுபிடிக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்பது அவரின் நோக்கமாகும்.

இப்படுகொலை சந்தேக நபர்களின் வீடுகள் எரிக்கப்பட்டு தடயங்கள் அழிக்கப்பட்டமை, நீதிமன்றச் சம்பவம் உட்பட இப்போராட்டங்களை வன்முறைப்படுத்த எடுக்கப்படும் சூழ்ச்சிகள் போன்ற அனைத்துமே ஒரே மையத்தில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகிறது என்ற வலுவான சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. வடக்கில் மீண்டும் இராணுவமயப்படுத்தவும், மக்களையும் குறிப்பாக பெண்கள் சிறுமியரையும் தொடர்ந்து ஒரு அச்ச சூழ்நிலையில் வைக்கும் உள்நோக்கம் இருப்பதாகவும் மஹிந்த ராஜபக்ஷவின் கூற்று கருத வைத்துள்ளது.

கடந்த காலத்தில் கொலை கொள்ளை, ஆட்கடத்தல், பாலியல் கொடுமைகள் என்பவற்றை நடத்திய நபர்கள் சக்தி மிகுந்த பின்புலத்தைக் கொண்டவர்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்வதும், நியாயமான போராட்டங்களை மாசுபடுத்த அவர்கள் எடுக்கும் முயற்சிகளையும் புரிந்துகொண்டு மக்கள் விழிப்பாக இருப்பது அவசியமாகும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிக்கப் பிறந்தவள்!



மலையாளத்தில் வெளியான How Old Are You? என்ற திரைப்படத்தை '36 வயதினிலே' எனத் தமிழில் தலைப்பிட்டு மொழிமாற்றம் செய்துள்ளார்கள். மலையாளத்தில் இயக்கிய ரோஷன் ஆண்ட்ரூஸ் தான் தமிழிலும் இயக்கியிருக்கிறார். ஜோதிகாவின் இரண்டாவது இன்னிங்ஸ் இத்திரைப்படத்தின் மூலம் துவங்கியிருக்கிறது.

காலைச் சாப்பாடு செய்துவைத்து, மதிய உணவையும் சேர்த்து எடுத்துக்கொண்டு போகும் நடுத்தரக் குடும்பத்தின் தலைவி ஜோதிகா. அரசு வேலையில் இருந்தாலும் அயர்லாந்து செல்லவேண்டும் என்ற கணவர் மற்றும் மகளின் ஆசைக்காக அயர்லாந்து வேலைக்கு முயற்சி செய்கிறார். 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வேலை தரமுடியாது என்று அயர்லாந்து நிறுவனம் கைவிரித்துவிட கணவரிடமும் மகளிடமும் திட்டு வாங்குகிறார் ஜோதிகா.

எங்க கனவே போச்சு என இருவரும் கோபப்படுவதைப் பார்த்து, எனக்கும் கனவு இருந்துச்சு, எனக்கும் ஒரு அடையாளம் இருந்துச்சு என துன்புறும் ஜோதிகாவின் பேச்சை கேட்கவும் அவர்கள் தயாராக இல்லை. இந்த சமயத்தில் ஜோதிகா கேட்ட ஒரு கேள்வியை அவரது மகள், பள்ளி விழாவில் கலந்துகொண்ட ஜனாதிபதியிடம் கேட்க இந்த கேள்வியைக் கேட்ட உன் அம்மாவை நான் பார்க்க வேண்டும் என்கிறார் ஜனாதிபதி. என்னை பாக்கனும்னு ஜனாதிபதியே கூப்பிட்டிருக்காரு என பெருமை பேசும் ஜோ, அவரை சந்தித்ததும் உயர் ரத்த அழுத்தத்தில் மயக்கமடைந்துவிடுகிறார்.

நீ எதுக்குமே பிரயோஜனம் இல்லை என்று திட்டிக்கொண்டிருந்த கணவனும், மகளும் ஜோதிகாவை விட்டு தனியே அயர்லாந்து சென்றபின்பு தான், குடும்பத்திற்காக வளைந்து நெளிந்து உடைந்து போய்விட்ட தன்னையும், தனது அடையாளத்தையும் தேடுகிறார் ஜோதிகா. முதல்முறை மகளால் ஜனாதிபதியை சந்திக்க வாய்ப்பு கிடைத்து சொதப்பிய ஜோ, இரண்டாவது முறையாக சொந்த உழைப்பால் ஜனாதிபதியை சந்திக்கும் அளவிற்கு வளர்வது தான் இரண்டாம் பாதி.

முழுக்க முழுக்க ஜோதிகா தான். அவர் இல்லாத காட்சிகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஒரு நடுத்தரக் குடும்பத்தின் தலைவிக்கான கதாபாத்திரத்தில் பொருத்திக்கொள்ள மிகவும் உழைத்திருக்கிறார். நடிப்பு கொஞ்சம் அதிகமாகியிருந்தாலும் 'ஓவர் அக்டிங்' ஆகியிருக்கும், குறும்புத்தனம் அதிகமாகியிருந்தால் கதாபாத்திரத்துக்கு ஒத்துப் போயிருக்காது. தலைமுடிக்கு கலர் அடித்து வரும் வழியில் இவர் அடிக்கும் 'லூட்டி' இருக்கிறதே அப்பப்பா. விமான நிலையத்தில் கணவனையும், மகளையும் அனுப்பிவிட்டு கல் போல உட்கார்ந்திருக்கிறாரே ஐயோ பாவம். கணவன் வந்து கூப்பிடும்போது என்னை நம்பி வந்தவங்கள தனியா விட்டுட்டு என்னால வரமுடியாது என கம்பீரமாக நிற்கிறாரே ஆச்சரியம்தான்.

சந்தோஷ் நாராயணின் இசையில் பாடல்கள் ஏற்கனவே 'ஹிட்'. பின்னணியிலும் பட்டைய கிளப்பியிருக்கிறார். சந்தோஷ் நாராயணனுக்கு இது ஒரு புதிய பரிமாணம்.

தமிழிலும் நானே இயக்குகிறேன் என முன்வந்த ரோஷன் ஆண்ட்ரூஸ்க்கு வாழ்த்துகளும் நன்றிகளும். வேறு யாராகவாவது இருந்திருந்தால் தமிழ் ரசிகர்களுக்கு ஏற்றாற் போல் மாற்றுகிறேன் என கதையில் கபடி விளையாடியிருக்கலாம். பாபி சஞ்சய் திரைக்கதையில் ஓரிடத்தில் மட்டும் 'லைட்'டாக சறுக்கியிருக்கிறார். அதனால் உண்டாகும் களைப்பை உணரத் துவங்கியதும் ஜோதிகாவின் விஸ்வரூபம் காப்பாற்றிவிடுகிறது.

எத்தனையோ திறமைகளிருந்தும் சாதிக்க வழியில்லாமல் முடங்கிக்கிடக்கும் பெண்களிடம் அப்படியிருக்கக்கூடாது என சொல்லும் படம். பெண்கள் பார்க்கவேண்டிய படம் என்று மட்டுமே சொல்லிவிட முடியாது. கணவர், பிள்ளைகள் என அனைவரும் பார்க்கவேண்டிய படம் 36 வயதினிலே. ஒவ்வொரு பெண்ணும் சாதிக்க பிறந்தவள் தான்.

**காலைச் சாப்பாடு செய்துவைத்து, மதிய உணவையும் சேர்த்து எடுத்துக்கொண்டு போகும் நடுத்தரக் குடும்பத்தின் தலைவி ஜோதிகா. அரசு வேலையில் இருந்தாலும் அயர்லாந்து செல்லவேண்டும் என்ற கணவர் மற்றும் மகளின் ஆசைக்காக அயர்லாந்து வேலைக்கு முயற்சி செய்கிறார்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருப்பதி சேஷாச்சலம் வனப்பகுதியில் மலைவாழ் மக்கள் இருபது பேரை மிகவும் கொடூரமான முறையில் படுகொலை செய்திருக்கிறது ஆந்திரப் பொலிஸ். அவர்களைப் பேருந்தில் வைத்துக் கைது செய்து, தோலைத் தீயால் சுட்டுக் கருக்கி, உறுப்புகளைச் சிதைத்து, மிகவும் வக்கிரமான முறைகளிலெல்லாம் சித்திரவதை செய்து, பின்னர்தான் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்பதும் மறைக்கவியலாதவாறு நிரூபணமாகியிருக்கின்றது.

> **ஆந்திர அரசு எந்த அளவுக்கு செம்மரம் விற்ற காசைச் சார்ந்து இருக்கிறதோ, அந்த அளவுக்கு கடத்தலைத் தடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது போலவும் நடிக்கிறது. இது கஞ்சா வியாபாரியிடம் மாமூலும் வாங்கிக் கொண்டு, வழக்குப் போட்டு உள்ளேயும் தள்ளும் பொலிஸின் நடத்தையைப் போன்றது.**

கொல்லப்பட்டவர்களது உறுப்புகள் சிதைக்கப்பட்டிருப்பதாகட்டும், அவர்களது உடலில் உள்ள குண்டுக்காயங்களாகட்டும், உடல்களுக்கு அருகில் மிகவும் அலட்சியமாக வீசப்பட்டிருக்கும் (ஏற்கெனவே கைப்பற்றப்பட்ட) செம்மரக் கட்டைகளாகட்டும், இந்தப் போலி மோதல் கொலை குறித்து ஆந்திர பொலிஸ் அளித்த கட்டுக்கதையாகட்டும், அனைத்திலும் வெளிப்பட்ட செய்தி ஒன்றுதான். அப்படித்தான் செய்வோம், எங்களை யார் என்ன செய்ய முடியும் என்று எல்லா சட்டபூர்வ நிறுவனங்களுக்கும், சமூகத்துக்கும் பொலிஸ் விடுத்திருக்கும் சவால்தான் அந்தச் செய்தி.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளை விஞ்சும் ஆந்திரப் பொலிஸின் இந்த நடவடிக்கைக்கு எதிரான கண்டனங்கள், நீதி விசாரணை மற்றும் சி.பி.ஐ. விசாரணைக்கான கோரிக்கைகள் நீதிமன்றப் பரிசீலனையில் இருக்கின்ற அதேவேளையில், இப்படி ஒரு படு கொலையை நடத்திப் பாடம் கற்பித்தா லன்றி, செம்மரக் கடத்தலைத் தடுக்க வியலாது என்று கூறி இந்த வெறியாட் டத்தை நியாயப்படுத்துகிறது ஆந்திர அரசு.

இன்னொருபுறம், எந்தக் குற்றத்தைத் தடுப்பதற்காக என்று கூறிக்கொண்டு இந்தப் படுகொலையை ஆந்திர அரசு நியாயப்படுத்தி வருகிறதோ, அந்தக் குற்றத்தை, அதாவது செம்மரக் கடத்தலை, சட்டபூர்வமாகவே அனுமதிக்க வேண்டும் என்றும், செம்மரக் கடத்தலுக்கு எதிரான தடையை நீக்கிவிட வேண்டும் என்றும், செம்மரம் வெட்டுதல், விற்பனை, ஏற்றுமதி ஆகியவற்றை சட்டபூர்வமாக அனுமதிப்பதன் மூலம் மட்டும்தான் இந்தக் கடத்தலை தடுக்க முடியும் என்றும், அருகி வரும் தாவர இனம் என்ற பட்டியலிலிருந்தே செம்மரத்தை நீக்கி விட வேண்டும் என்றும் ஆந்திர வனத்துறை அமைச்சர் போஜ்ஜல கோபாலகிருஷ்ண ரெட்டி கோரியிருக்கிறார்.

இதுதான் செம்மரக் கடத்தல் குறித்த ஆந்திர அரசின் நிலை என்றால், 20 உயிர்களை ஏன் கொடூரமாகப் பறிக்க வேண்டும்? இந்தப் படுகொலையும் அமைச்சரின் கோரிக்கையும் முரண்பட்டவை போலத் தோன்றுகின்றன. ஆனால், இந்த இரண்டுக்குமிடையே முரண்பாடு இல்லை என்பதே உண்மை.

செம்மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை இந்திய அரசுக்கோ, ஆந்திர அரசுக்கோ கடுகளவும் இல்லை. எப்போதும் இருந்ததுமில்லை. அருகி வரும் தாவர இனங்கள் மற்றும் விலங்கினங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியா உள்ளிட்ட 179 நாடுகள் கையொப்பமிட்டிருக்கின்றன. மேற்கூறிய ஒப்பந்தத்தால் தடை செய்யப்பட்டுள்ள தாவர வகைகளில் செம்மரமும் ஒன்று.

எனவே தவிர்க்கவியலாமல் 1998 முதல் இந்தியா செம்மரக் கட்டைகளின் ஏற்றுமதியைத் தடை செய்திருக்கிறது. இதன்படி அரசுக்கு சொந்தமான காடுகள், தனியாருக்கு சொந்தமான நிலங்கள் ஆகிய எங்கிருந்தும் செம்மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்வது குற்றமாகும்.

இந்திய கைவினைப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு செம்மரத்தினால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களின் உள்நாட்டு விற்பனை மற்றும் ஏற்றுமதியை மட்டும் மைய அரசு அனுமதித்திருக்கின்றது.

கடத்தப்படும் கட்டைகளை மடக்கிப் பிடிப்பவர்கள் ஆந்திர அரசின் வனத்துறை மற்றும் பொலிஸ் மட்டுமல்ல. தமிழக - கர்நாடக பொலிஸ், மத்திய வருவாய் உளவுத்துறை, சுங்கத்துறை, துறைமுகம் உள்ளிட்ட எல்லா மிருகங்களுக்கும் இந்த வேட்டையில் பங்கு உண்டு. இவர்களெல்லாம் தாங்கள் கைப்பற்றும் கட்டைகளை, ஆந்திர அரசிடம் ஒப்படைக்காமல், தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொள்கின்றனர்.

செம்மரக் கடத்தல் மூலம் மஃபியாக்கள், அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தினர் கோடிக்கணக்கில் வருவாய் ஈட்டுகிறார்கள் என்பது தெரிந்த செய்தி. ஆந்திர அரசும் தனது நிதி வருவாய்க்கு செம்மர விற்பனையை நம்பியிருக்கிறது என்பது நாம் கவனிக்கத் தவறும் செய்தி.

ஆந்திர விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி அறிவித்திருக்கும் சந்திரபாபு நாயுடு, கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கும் செம்மரத்தைச் சர்வதேசச் சந்தையில் ஏலம் விட்டு, கிடைக்கும் பணத்தில்தான் விவசாயி களுக்குக் கடன் தள்ளுபடி தர இயலும் என்று வெளிப்படையாகவே பேசியிருக்கிறார்.

அதாவது, ஆந்திர அரசுக்கு வருவாய் வேண்டுமென்றால் செம்மரம் விற்க வேண்டும். தற்போதுள்ள தடையின் காரணமாக அரசு வெளிப்படையாக செம்மரம் வெட்டி விற்க முடியாது. கடத்தல்காரர்கள் சட்டவிரோதமாக செம்மரம் வெட்டினால், அதனைக் கைப்பற்றி விற்றுத்தான் பணமாக்க முடியும். அப்படித்தான் சென்ற ஆண்டு சுமார் 1000 கோடி (இந்திய) ரூபாய் ஈட்டப்பட்டிருக்கிறது. கடத்தல் நடந்தால்தானே அரசு கைப்பற்ற முடியும், விற்றுக் காசாக்க முடியும்? எனவே செம்மரக் கடத்தலில் ஆந்திர அரசு மறைமுகக் கூட்டாளியல்ல, நேரடிக் கூட்டாளி என்பதே உண்மை.

ஆந்திர அரசு எந்த அளவுக்கு செம்மரம் விற்ற காசைச் சார்ந்து இருக்கிறதோ, அந்த அளவுக்கு கடத்தலைத் தடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது போலவும் நடிக்கிறது. இது கஞ்சா வியாபாரியிடம் மாமூலும் வாங்கிக் கொண்டு, வழக்குப் போட்டு உள்ளேயும் தள்ளும் பொலிஸின் நடத்தையைப் போன்றது.

சந்திரபாபு நாயுடு சொல்வது போல, விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி தருவதற்கு மட்டுமல்ல, அரசு ஊழியர்களுக்கு மாதாந்திர சம்பளம் கொடுக்க முடியாத நிலையை பல மாநில அரசுகளும் எய்தி விட்டன.

20 பேரின் படுகொலையை நியாயப்படுத்திப் பேசிய அமைச்சரின் அதே நாக்கு அருகிவரும் தாவரம் என்ற பட்டியலிலிருந்தே செம்மரத்தை நீக்குமாறு வெட்கமே இல்லாமல் பேசுகிறதே, இதன் பொருள் என்ன? செம்மரத்தை வெட்டிக் காசு சம்பாதிப்பதில் கடத்தல்காரர்களை விடவும், ஆந்திர அரசு தீவிரமாக இருக்கிறது என்பதே இதன் பொருள்.

ஆனால், இந்தப் படுகொலையின் பின்புலத்தில் உள்ள அரசியலாக நாம் கவனிக்க வேண்டிய முதன்மையான [illegible]துவல்ல. செம்மரம் கடத்தும் ஏகபோக உரிமை அரசுக்கு மட்டுமே உரியது என்பதுதான்.

ஆந்திர அரசு [illegible] தடை நீக்கப்படுமானால், அதனை ஆந்திர அரசு சட்டபூர்வமாகவே வெட்டி விற்பனை செய்யும். நீக்கப்படவில்லையானால், கடத்தல்காரர்கள் மூலம் மரத்தை வெட்ட அரசே ஏற்பாடு செய்யும். பின்னர், அதில் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஏலம் விட்டுக் காசாக்கிக் கொள்ளும். அதேநேரத்தில், கடத்தலைத் தடுத்து செம்மரங்களைக் காப்பாற்றுவதில் அரசு முனைப்பாக இருப்பதாகக் காட்டும் பொருட்டு, அவ்வப்போது ஏழைகள் சிலரை ஆந்திர பொலிஸ் சுட்டுக் கொல்லும்; சிறை பிடிக்கும்.

மலைவாழ் மக்களைப் பொறுத்தவரை, வளர்ச்சி என்ற பெயரில் அரசு காடுகளை அழித்தாலும் சரி, வனப்பாதுகாப்பு வனவிலங்குப் பாதுகாப்பு என்ற பெயரில் காடுகளைக் காப்பாற்ற முனைந்தாலும் சரி, அதன் நோக்கம் மலைவாழ் மக்களை வெளியேற்றுவதாகவே இருக்கிறது. இந்தக் கத்தி இரண்டு பக்கமும் மலைவாழ் மக்களை வெட்டுகிறது.


மலைவாழ் மக்களைப் பொறுத்த வரை, காடுகளைத் தங்களது வாழ்வின் ஆதாரமாகவும், வாழ்க்கையிலிருந்து பிரிக்கவொண்ணாத அங்கமுமாகவே அவர்கள் கருதி வந்திருக்கிறார்கள். செம்மரம் முதல் சந்தன மரம் வரை அனைத்திலும் பணம் காய்த்துத் தொங்குவதைப் பார்த்த முதலாளித்துவம்தான் அவற்றை வெட்டிக் காசாக்குகிறது.

இவ்வாறு ஏற்கெனவே அழிக்கப்பட்ட சவ்வாது மலைக் காடுகளின் மைந்தர்கள்தான், இன்று செம்மரம் வெட்டுவதற்குக் கூலிக்காரர்களாக அமர்த்தப்பட்டவர்கள். நாளை செம்மர ஏற்றுமதியின் மீதான தடையை நீக்குவதில் ஆந்திர அரசு ஒருவேளை வெற்றி பெறலாம். அப்போதும் திறமை வாய்ந்த மரம் வெட்டிகளைத் தேடி தரகர்கள் சவ்வாது மலைக் கிராமங்களுக்கு வருவார்கள்.

மலைவாழ் மக்களை இந்த விஷவலையில் சிக்காமல் தடுக்க வேண்டுமானால், சவ்வாது மலையின் மீது தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு அவர்களை நாம் பயிற்றுவிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம்-23



அசலான க்யூபா மண்ணின் மைந்தர்கள் இவர்கள் தான். க்யூபாவின் சரித்திரம் இவர்களைப் பற்றியதாக இருக்க வேண்டும் என்றார் காஸ்ட்ரோ.

டை நோசியர்கள் விவசாயத்தில் ஊறிப் போனவர்கள். சிமோனியர்கள் சிறந்த வேட்டைக்காரர்கள். ஸ்பானியர்கள் வரவால் முதலில் பாதிப் படைந்தது இந்த இரு பழங்குடியின மக்கள் தான். [illegible] நிலத்திலேயே இவர்கள் அடிமைகளாக மாற்றப்பட்டனர். கழுதைகளைப் போல் இவர்களை உபயோகப்படுத்திக் கொண்டது ஸ்பெயின். அலறித் துடித்த பலர் நாட்டை விட்டு வெளியேறினர். பிரியாமல் க்யூபாவோடு ஒட்டிக் கிடந்த பலர் கொல்லப்பட்டனர். அவர்களது இடத்தை ஸ்பானியர்கள் பிடித்துக் கொண்டனர். பழங்குடியினர் கணிசமான அளவு காணாமல் போனதும் தான். அவர்களுக்கு ஓர் விஷயம் புரிந்தது. அதாவது ஸ்பானியர்களுக்கு விவசாயம் தெரியாது. காடுகளிலும் மலைகளிலும் வேலை செய்யத் தெரியாது.


அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்த போது அவர்களுக்கு கை கொடுத்தவர்கள் ஆபிரிக்க அடிமைகள். ஆபிரிக்க அடிமைகளை அதிக அளவில் முதல் முறையாக உபயோகப்படுத்திக் கொண்ட பெருமை ஸ்பெயினையே சாரும். போர்த்துக்கல் , பிரேசில், அமெரிக்கா உள்பட பல நாடுகள் அடிமைகளை தருவித்துக் கொண்டுதானிருந்தன. ஆனால் ஸ்பெயினை மிஞ்ச முடியவில்லை. ஆபிரிக்க அடிமைகளுக்கு கடுமையான பணிகள் ஒதுக்கப்பட்டன. க்யூபாவின் வளங்களை வெளிக்கொணர இவர்கள் பயன்படுத்தப்பட்டனர் க்யூபாவின் இயற்கைவளம் பிரமிப்பூட்டு வதாக இருந்தது. தங்கம், வெள்ளி, ஆபரணக் கற்கள் எதையும் ஸ்பானியர்கள் விட்டு வைக்கவில்லை. செல்வங்களை தேடித் தேடி குவித்தனர். க்யூபா நம்பிக்கை தரும் தீவு என்பது சர்வ நிச்சயமாகத் தெரிந்து போனது. கூடவே பயமும் வந்து ஒட்டிக் கொண்டது. இத்தனை அழகிய பகுதியை வேறு யாராவது கவர்ந்து சென்றால் என்ன செய்வது? உடனடியாக கோட்டைகள் கட்டப்பட்டன. சுவர்கள் எழுப்பப்பட்டன. வெளியாள்கள் உள்ளே வராமல் தடுக்கவும் க்யூபர்கள் வெளியே எங்கும் தப்பிப் போகாமல் இருக்கவும் கூலிப்படைகள் உருவாயின. ஒரு காலனி நாடு என்பதையும் தாண்டி க்யூபா முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. முதலில் ஒரு சுங்கச் சாவடியாகவும் பிறகு ஸ்பெயி னின் பொருளாதாரத்தைப் பெருக்க உதவும் சொர்க்க பூமியாகவும் க்யூபா மாறிப்போனது.

க்யூபாவால் கவரப்பட்ட பிரிட்டிஷ் 1762 இல் ஸ்பெயின் மீது போர் தொடுத்தது. போரின் முடிவில் க்யூபா ஸ்பெயின் வசமானது. ஸ்பெயினின் காலனி நாடாக இருந்த போது க்யூபா ஸ்பெயினுடன் மட்டுமே வர்த்தகம் செய்து கொண்டிருந்துது. ஸ்பெயின் அரசாங்கம் மட்டுமே அனைத்து உற்பத்திப் பொருள்களையும் வாங்கிக் கொள்ளும். பொருள் களுக்கான விலை ஸ்பெயின் அரசாங்கம் தான் தீர்மானிக்கும். க்யூபா விவசாயிகள் எதிர்த்துப் பேசக் கூடாது. அவர்கள் சொன்ன அடிமாட்டு விலைக்கு சரக்குகளை விற்று விட்டு அவதிப் படுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. 1762 இல் பிரிட்டன் ஹவானாவைத் கைப் பற்றிய போது முதல் முறையாக க்யூபா தனது பண்டங்களை ஸ்பானியர்கள் அல் லாத பிறருக்கும் விற்பனை செய்யத் தொடங்கியது.

**(தொடரும்)**

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 674




**மேலிருந்து கீழ்**

1 - நெஞ்சுக்குப் பின்புறம் உள்ளது.
2 - ஒரு பயிர் வகை.
3 - சேலை.
4 - செல்வம்.
6 - வேகமான செயல்போக்கு.
9 - மிகுந்த.
11 - எதிரி.
13-தமது.
15- முதுகு வளைவதால் விழுவது.
16- அமிர்தம்.
18- நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்.
19- பருத்த உடல்வாகை இப்படிக் குறிப்பிடுவர்.
21 - விழி.
22- வலிமை.
24 - சமய.

**இடமிருந்து வலம்**

1 - ஒருவருக்கு முன்னால் அவரைப் புகழ்தல்.
5 -திறப்பு.
7- செம்பழுப்பு நிறப்படிவு.
8 -நுண்ணிய உயிரினம்.
10 -குழுவாக தீய செயல்களில் ஈடுபடுபவர்கள்.
12 - வாசலில் இருப்பது.
14- நெருப்பு எரிவதால் வெளிப்படுவது.
15 - சேவல் விடிகாலையில் செய்வது.
17 - சொற்களின் கூட்டம்.
20 - மணத்தல்.
22 - இசைப்பாட்டு.
23 - குளிர்மை.
24 - குழந்தை பெற முடியாத தன்மை.
25- இணக்கம்.

அனுப்புபவர் பெயர்:------------------------------
விலாசம்:------------------------------
------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 674

■ சொற்சிலம்பம் போட்டி 674ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2015 ஆம் ஆண்டு ஜீன் மாதம்10 ஆம் திகதி ஆகும்.

■விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, ஜீன் 17 மற்றும் ஜீன் 24 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### போட்டி இல 671இல் பரிசு பெற்றோர்

1. திருமதி.து. வத்சலா, ஆழ்வான் கிணற்றடி, பன்னாலை, தெல்லிப்பளை.
2. செல்வி தி.பாரதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
3. செல்வி.ரா.உஷாந்தினி, ஆண்டு 12, யா/ ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்.

### பாராட்டுப் பெறுவோர்

தேவதாசன் மோகேந்தர், அனிஞ்சியன் குளம், யோகபுரம்.

அ.ஸ்ரீஸ்கந்தராசா, இல 15/11,புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

வே.இராசநாயகம், சோறன்பற்று, பளை.

ஐ.விஜயபாலன், இல 10, மருதடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.

தா.சிறிதரன், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

### சொற்சிலம்பப் போட்டி 672இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.அறிமுகம்.
2.சமத்துவம்.
3.கடிது.
4.சதம்.
5.தான்.
7.புரளி.
9.கரு.
10.வாசம்.
13.கண்ணிவெடி.
15.சமிபாடு.
16.தர.
17.அகழி.
18.தம்பி.
19.சவ.

**இடமிருந்து வலம்**

1.அச்சகம்.
4.சதா.
6.மடி.
7.புதன்.
8.முகத்துவாரம்.
11.கருது.
12.சனி.
14.வசம்.
16.தண்.
17.அம்மி.
18.தரணி.
19.சக.
20.பாதம்.
21.வழிபாடு.
22.பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிங்கப்பூர் சுதந்திரமடைந்தவுடன் புதிய நாட்டின் பிரதமர் மீண்டும் லீ குவான் யூ. (சிங்கப்பூரை ஆட்சி செய்வது பிரதமர்தான். ஆனால் சிங்கப்பூர் ஜனாதிபதிக்கு எமது ஜனாதிபதியைவிட அதிக அதிகாரங்கள் உண்டு. அங்கு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பது மக்கள்தான். நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பது, நாட்டின் இயற்கை வளங்களைக் காப்பது போன்ற விஷயங்களில் அவருக்கு வீட்டோ அதிகாரம்கூட உண்டு. என்றாலும் பிரதமரை விட அதிகாரங்கள் மிகக் குறைவே).

மிகச் சிறிய பரப்பளவையும், குறைவான இயற்கை வளங்களையும் கொண்ட சிங்கப்பூர் பெரிய அளவில் வளர்ந்துவிடாது என்றுதான் பலரும் நினைத்தனர். ஆனால் நடந்ததோ வேறு.

சிங்கப்பூரின் பொருளாதாரம் வெகுவேகமாக வளர்ந்தது. மக்களின் வாழ்க்கைத் தரம் செழித்தது. ஆனால் அரசு எக்கச்சக்கமான கட்டுப்பாடுகளை விதித்து சமுகத்தைத் தொடர்ந்து தன் பிடியில் வைத்துக் கொண்டிருக்கிறது.

1990இல் ஒரு திருப்பம். லீ குவான் யூ பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். இவர் விதித்த கட்டுப்பாடுகளின் காரணமாக விமர்சனங்கள் எழுந்திருந்தாலும், நவீன சிங்கப்பூரின் சிற்பி இவர்தான் என்பதில் வேறு கருத்துகள் இல்லை.

கோ சோக் டோங் என்பவர் அடுத்த பிரதமர் ஆனார். கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்பட்டன. இருபது வருடங்களை அமெரிக்காவில் கழித்தவர் இவர். நிர்வாணப் புகைப்படங்களுக்குப் பெயர்போன ப்ளே பாய் பத்திரிகைக்கு சிங்கப்பூரில் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியதால் டோங் மீது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியது.

அதற்காக, கருத்து சுதந்திரத்துக்கு முழு மதிப்பு கொடுத்தவர் என்று இவரைக் கூறிவிட முடியாது. சிங்கப்பூர் அரசை எதிர் மறையாக விமர்சித்த சில தொலைக்காட்சிச் சானல்களுக்கு இவர் தடை விதித்தார். அதே சமயம் எம்.டி.வி., டிஸ்கவரி போன்ற சனல்களில் ஆசியத் தலைமையிடம் சிங்கப்பூரில்தான் அமைய வேண்டும் என்பதற்காக மிகவும் பாடுபட்டார். 1998இல் பல ஆசிய நாடுகளின் பொருளாதாரம் சீர்குலைந்தது. குறைவான மக்கள் தொகை, குறைவான இயற்கை வளங்கள் ஆகியவற்றைக் கொண்ட சிங்கப்பூர் மிகவும் உழைத்தால்தான் தங்கள் வளர்ச்சி விகிதத்தைத் தொடர முடியும் என்ற நிலை உண்டானது. முக்கியமாக ஹொங் ஹொங், சிங்கப்பூருக்கு வணிகத்தைப் பொறுத்தவரை கடும் போட்டியை அளித்தது. என்றாலும் நிலைமையை சமாளித்து எழுந்து நின்றது சிங்கப்பூர்.

கோ சோக் டோங் ஆட்சியில் மேலும் பல சிக்கல்கள் முளைத்தன. ஜென்மா இஸ்லாமியா என்னும் தீவிரவாத அமைப்பின் மிரட்டல்கள், 2003இல் சார்ஸ் கொள்ளை நோய் என்று பல நெருக்கடிகள். இதைத் தொடர்ந்து 2004இல் பிரதமரானார் லீ ஸெயின் லூங். இவர் லீ குவான் யூவின் மகன்தான். 2006இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் ஒருவிதத்தில் முக்கியமானது.

பிரசாரம் இணையம் மூலமாக பரவலாகச் செய்யப்பட்டது. அதிகாரபூர்வ ஊடகங்களைத் தாண்டியும் மக்களை அடைய முடியும் எனும் நிலை புதிய உற்சாகத்தை உண்டாக்கியது. 84 நாடாளுமன்றத் தொகுதிகளில், 82-ஐ வென்றது மக்கள் செயல் கட்சி (பிஏபி).

2011 தேர்தல் வேறொரு விதத்தில் முக்கியமானது. ஆட்சி செய்த பிஏபி இந்தத் தேர்தல் மிக முக்கியமானது. நம் நாட்டின் அடுத்த தலைமுறைத் தலைவர்களை இனம் காட்டும் தேர்தல் இது என்றது. சுதந்திரத்துக்குப் பிறகு அதிகமான தொகுதிகளில் போட்டி நடைபெற்றது இந்தத் தேர்தலில்தான். 87 தொகுதிகளில், 82-ல் போட்டி இருந்தது. 81 தொகுதிகளை வென்று ஆளும் கட்சியே மீண்டும் ஆட்சிக்கு வந்தது என்றாலும் வேறொரு கட்சி (பாட்டாளிக் கட்சி) 6 இடங்களை வென்றதே சிங்கப்பூர் அரசியலில் வியப்புக்குரிய விஷயம்தான்.

கடுமையான சட்டதிட்டங்கள் கொண்ட நாடு சிங்கப்பூர். தெருவில் குப்பை போடக் கூடாது. சூயிங்கத்துக்குத் தடை. தீவிர பெண்ணியக் கொள்கைகள் கொண்ட மகளிர் இதழ்களுக்கு அச்சிட அனுமதி கிடையாது. நாளிதழ்களில் ஆளும் கட்சிக்கு எதிரான விமர்சனங்கள் கடுமையாக எதிர்கொள்ளப்படும்.

சிங்கப்பூர் சட்டம் என்பது பொதுவாக பிரிட்டிஷ் சட்டமுறைகளைப் பின்பற்றுகிறது. ஆனாலும் சில வித்தியாசங்கள் உண்டு. இன்னமும்கூட திருட்டு, கற்பழிப்பு போன்ற சில குற்றங்களுக்கு சவுக்கடி தண்டனை உண்டு. கொலை செய்தால் மரண தண்டனை மட்டுமே. சில வகை போதை மருந்துக் கடத்தலுக்கும் ஆபத்தான ஆயுதப் பதுக்கலுக்கும் கூட மரண தண்டனை உண்டு.



சிங்கப்பூரில் அதிகம் பின்பற்றப்படுவது புத்த மதம். என்றாலும் கிறிஸ்தவம், இந்து மதம், இஸ்லாம், தாவோயிஸம் போன்ற மதங்களும் கணிசமாகவே உள்ளன. சிங்கப்பூரில் உங்கள் இஷ்டத்துக்கு வீடு கட்டிக் கொள்ள முடியாது. பத்தில் ஒன்பது பேர் அரசு வீட்டு அடுக்குமாடிகளில்தான் வசிக்கிறார்கள்.

1964இல் உண்டான இனக்கலவரத்தைத் தொடர்ந்து ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியது சிங்கப்பூர் அரசு. வீட்டு வசதி வாரியம் கட்டித்தரும் அடுக்குமாடிகளை வாங்குபவர்கள் இன விகிதப்படி இருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு அடுக்கு மாடிக் கட்டிடத்திலும் அனைத்து முக்கிய இனத்தவர்களும் இருக்க வேண்டும்.

சிங்கப்பூரின் ஜனநாயகம் கொஞ்சம் வித்தியாசமானது. அரச மருத்துவமனைகளில் கூட பொருளாதாரத்துக்குத் தகுந்த மாதிரிதான் வசதிகள். எந்தக் கட்டணம் செலுத்தத் தயாராக இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து உங்களுக்குரிய படுக்கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். என்றாலும் மருத்துவ சேவைகள் ஒரே மாதிரியானவை.

இப்போதைக்கு சிங்கப்பூர் அரசை பயமுறுத்திக் கொண்டிருக்கும் வேறொரு விஷயம் எந்த அளவுக்கு வெளிநாட்டினரை நிரந்தரமாகத் தங்க அனுமதிப்பது என்பதுதான். சமீபத்திய ஒரு கணக்கெடுப்பின்படி இனப்பெருக்க விகிதம் என்பது 1.2 சதவீதமாக இருக்கிறது. ஆனால் வேலையில் அமர்த்தப்பட வேண்டியவர்களின் விகிதமோ 2.1 ஆக இருக்கிறது. (உலகின் மிகக் குறைந்த இனப்பெருக்க நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று).

வேலைக்குத் தேவை என்பது ஒருபுறமிருக்க வெளிநாட்டு இளைஞர்களை அனுமதிக்காவிட்டால் சிங்கப்பூர் மக்களின் சராசரி வயது அதிகமாகிவிடும். முதியவர்களின் சதவீதம் பெருகிவிடும். என்றாலும் வணிக அளவில் மிகச் சிறந்த நல்லுறவை சிங்கப்பூர் வளர்த்து வருகிறது. உலகில் ஊழல் மிகமிகக் குறைவாக உள்ள நாடுகளில் ஒன்றாக சிங்கப்பூர் மதிப்பிடப்படுகிறது. **(முற்றும்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவில் வெளியிடப்படும்

ரஜினிகாந்த் நடிக்கும் படத்தை ரஞ்சித் இயக்க இருப்பதுதான் இப்போதைய பிரபல்யம். இதனை முழுப் படத்தையும் முடித்துவிட்டு வெளியீட்டுக்கு முன்பு தெரிவிக்கலாம் என நினைத்திருந்தாராம் ரஜினி. ஆனால் ஆரம்ப கட்டத்திலேயே வெளியாகி விட்டதால் வருத்தப்பட்டாராம். இதனால் ஜூன் மாதம் படப்பிடிப்பு தொடங் குவதற்கு முன்பு அறிவிக்க இருக்கிறார்களாம்.





# மீண்டும் அஞ்சலி

சொந்தப் பிரச்சினை காரணமாக நீண்ட நாள்கள் விடுப்பிலிருந்த அஞ்சலி, அப்பாடக்கர், மாப்ள சிங் கம் படங்களில் நடிக்கிறார். அந்தப் படங்களில் முன்பிருந்ததைப் போல இரண்டு மடங்கு குண்டாகக் காணப்பட்டார். இயக்குநர்களும் கவர்ச்சிக்கு இந்த பருத்த உடல் ஏற்றதுதான் என கண்டுக்காமல் விட்டு விட்டார்கள். ஆனால் தனது இறைவி படத்துக்காக அஞ்சலியை கமிட் பண்ணிய கார்த்திக் சுப்புராஜ், உடல் எடையைக் குறைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்க, அவர் சில வாரங் களிலேயே பத்து கிலோ எடையைக் குறைத்து சி க்கென்று ஆகிவிட்டார்.

# குறைந்த சம்ப
# நிறைந்த ந

தனுஷுடன் மாரி, விக்
மனிதன், விஷாலுடன் பா
பெரிய படங்களைக் கை
வைத்திருந்தாலும் வயது
ஏறிக்கொண்டே போவத
இடத்தைப் புதிதாக வந்
நடிகர்கள் பிடித்து விடுவ
கவலையில் உள்ளார் கா
விளைவு தமிழ், தெலுங்
மொழிகளிலும் குறைந்த
எந்த அளவுக்கு வேண்டு
கவர்ச்சி காட்டத் தயார்
தெரிவித்துள்ளார்.

# சர்ச்சைகள
# பெயர் வா

சினிமாவில் நடித்துப் பெயர் வாங்கியதைவிட, சர்ச்சைகளாலேயே பெயர் வாங்கியவர் ராதிகா ஆப்தே. அனுராக் காஷ்யப் படத்தில் நிர்வாண மாக நடித்த வீடியோ வெளியான பின், தற்போது இன்னொரு சர்ச்சையில் சி க்கியுள்ளார். ஹிந்தி இயக்குநர் அனுராக் பாசு, ரவீந்திரநாத் தாகூர் சிறுகதையைத் தழுவி, தயாரிக்கும் தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் ஆடை எதுவும் அணியாமல் நடிக்கி றாராம். கதை பிடித்திருந்தால் எந்த எல்லை வரையும் போய் நடிக்கத் தயார் என்கிறாராம்.





# பட்மின்ரன் வீரரை காதலிக்கும் டாப்ஸி

டாப்ஸி தமிழ், தெலுங்கு, இந்திப் படங்களில் நடித்து வருகிறார். நடுநடுவே கிடைக்கும் ஓய்வு நேரங்களில் பட்மின்டன் விளையாட்டை ரசிக்கிறார். விசாரித்ததில், வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு பட்மின்டன் வீரரை டாப்ஸி காதலிக்கிறாராம். இருவரும் சேர்ந்து ஊர் சுற்றுகிறார்களாம். இதுபற்றி டாப்ஸியிடம் கேட்டால் என் காதல் பற்றி அப்பா, அம்மாவிடம் சொல்லுவேன். உங்களிடம் சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...பளத்தில் ... நடிப்பு

...க்ரமுடன் மர்ம
... பாயும் புலி என
...கைவசம்
...து
...வதால், தன்
...ந்திருக்கும்
...வார்களோ என்ற
... காஜல் அகர்வால்.
...ங்கு இரண்டு
...ந்த சம்பளத்துக்கே
...டுமானாலும்
...ர் என சம்மதமும்

## ...ளாலேயே ...ங்கியவர்







# இளம் நடிகர்களுடன் நயன்தாரா

தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் நயன்தாராவின் ஆளுமை மட்டும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகிறது. தெலுங்கில் அவருடன் ஜோடி சேர இளம் நடிகர்கள் துடித்துக் கொண்டிருக்க, அவரோ பாலகிருஷ்ணாவுக்கு படப்பிடிப்பு நேரத்தையும் ஒதுக்கித் தந்துள்ளார். அதே கதைதான் தமிழிலும். விஜய் சேதுபதி, உதயநிதி ஸ்டாலின் என இளம் நடிகர்களுடன் நடிக்கும் நயன்தாரா, அடுத்து பா.ரஞ்சித் இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினி நடிக்கும் புதிய படத்தில் நடிக்கவுள்ளார். ஆனால் இதில் குத்துப்பாடல் பாடாமல் அழுத்தமான கதாபாத்திரத்தில் நடிக்கிறாராம்.

# சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் நடிகை

மேகா படத்தில் குடும்ப குத்துவிளக்காக அறிமுக மானவர் சிருஷ்டி டாங்கே. சமீபத்தில் ஒரு படத்தில் கவர்ச்சியில் எல்லை தாண்டி இருக்கிறார் சிருஷ்டி. அதனைக் கேள்விப்பட்ட இன்னொரு படத்தின் இயக்குநரும், தயாரிப்பாளரும் தங்கள் படத்திலும் அதே மாதிரி நடிக்க வேண்டும் என கேட்க, சிருஷ்டி சம்பளத்தை அதிகமாகக் கேட்க, சம்மந்தமாகி அவர்கள் கேட்டபடி நடித்துக் கொடுத் துள்ளாராம்.


# வெல்லப்போவது யார்?

ஏற்கனவே ஆரம்பம், கத்தி, ஐ படங்களோடு நேரடியாக மோதியவர் விஷால். தற்போது விநாயகர் சதுர்த்தி தினத்தில் விஜய்யின் புலியுடன் மோதவிருக்கிறது விஷாலின் பாயும் புலி. ஜெயிக்கப் போவது புலியா? பாயும் புலியா? என ரசிகர்கள் மோதிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் முதலில் வெளியிட்டுத் திகதி அறிவித்தது நாங்கள் தான். அதனால் பாயும் புலி பின்வாங்க வாய்ப்பில்லை என்கிறார்கள் விஷால் தரப்பினர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணம் தீட்டுவோம்



# மாற்றம்

ஜமீன்தார் ஒருவர் தனது வீட்டுக்கு இன்னொரு ஜமீன்தாரை விருந்துக்கு அழைத்திருந்தார். விருந்தாளி வரும்போது மாளிகை பளபளப்பாக இருக்கவேண்டும் என்பதற்காக சுத்தப்படுத்தி அலங்காரமாக்கும் வேலை நடந்தது.

அந்த மாளிகையில் நடுநாயகமாக, பிரமாண்டமாக இருந்த பளிங்குகளால் ஆன படிக்கட்டுகளை பளபளப்பாக்கும் வேலையும் நடந்தது. வேலை செய்பவர்கள் மேலே இருந்து துடைத்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த ஜமீன்தார் ஒருவனை பார்த்து, 'ஏன் மேலே இருந்து துடைக்கிறாய், கீழே இருந்து துடைத்துக் கொண்டு போ' என்றார்.

வேலை செய்பவர்கள் திரு திரு என முழித்தார்கள். அந்த படிக்கட்டுகளை எப்படியும் துடைக்கலாம். ஆனால் எது அதிக பலனைத் தரும். கீழே இருந்து துடைத்தால், அதிகபட்சம் நான்கு படிக்கட்டுகளை துடைக்கலாம். அதற்கும் மேல் துடைக்க, துடைத்த படிகட்டுகள் மீதே கால் வைத்து ஏற வேண்டி இருக்கும். அது மீண்டும் அழுக்காகுமே?

இனி இந்த கதையில் நீதியை மட்டும் பார்ப்போம். நம் நாட்டில் மக்கள் லஞ்சம் கொடுக்கக் கூடாது. அவர்கள் தரமானவர்களாக இருந்தால்தான் அவர்கள் தேர்ந்தெடுக்கும் தலைவர்களும் தரமானவர்களாக இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இதுவும் உண்மை. எனவே மக்களிடமும் தரம் வேண்டும்தான். ஆனால் அதைவிட வேகமான மாற்றத்தை தலைவர்கள்தான் தரமுடியும்.

எப்படி படிக்கட்டுகளை மேலே இருந்து துடைத்தால் அது அதிக பலனைத் தருமோ, அதேபோல் மேலே இருப்பவர்கள் சுத்தமாக இருந்தால் அது சமுதாயத்தில் வேகமான மாற்றத்தை ஏற்படுத்தும். ஒரு குப்பனோ, ராமனோ சிகெரெட் பிடிப்பதை, அல்லது அவர்கள் தரும காரியங்கள் செய்வதை பார்த்து மற்றவர்கள் பின் தொடரும் வாய்ப்புக் குறைவு. ஆனால் அதே செயலை ஒரு தலைவரோ அல்லது நடிகரோ செய்தால் அதன் வீச்சு அதிகமாக இருக்கும். எனவே மாற்றம் இருபக்கமும் வேண்டும். அது மேலே இருந்து ஆரம்பித்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

# பூனை அண்ணா



எங்கள் வீட்டுப் பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தைத் தடவும்
நாற்காலியின் கீழ் படுக்கும்.

# தெரிந்து கொள்ளுங்கள்

- பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுவர்?
  ஆடம் ஸ்மித்
- ஆசியாவில் முதன் முதலாக தொழில்மயமான நாடு?
  ஜப்பான்
- ஆசியாவில் கடைசியாக தொழில்மயமான ஐரோப்பிய நாடு?
  ரஷ்யா
- காளானில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து எது?
  பென்சிலின்
- லட்சத்தீவில் அதிகம் பேசப்படும் மொழி?
  மலையாளம்
- சிவப்பு எறும்பின் கொடுக்கில் அமைந்துள்ள அமிலம்?
  பாரமிக் அமிலம்
- தாஸ் கேபிடல் என்றும் புத்தகத்தை எழுதியவர்?
  கார்ல் மார்க்ஸ்
- வௌவால் ஏற்படுத்தும் ஒலி?
  மீயொலி
- மனிதன் ஒரு அரசியல் மிருகம் எனக் கூறியவர்?
  அரிஸ்டாட்டில்
- வனவிலங்கு தடுப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?
  கி.பி 1890ல்



# எல்லோரா குகை

எல்லோரா இந்திய மாநிலமான மகாராஷ்டிராவில் உள்ள ஒரு தொல்லியல் திணைக்களமாகும். இது அவுரங்காபாத், மகாராட்டிரம் நகரிலிருந்து 30 கி.மீ தொலைவில் உள்ளது. ராஷ்டிரகூட மரபினரின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த இந்தக் களம் புகழ் பெற்ற குடைவரைகளைக் கொண்டு விளங்குகிறது. எல்லோரா ஒரு உலக பாரம்பரியக் களம் ஆகும்.

எல்லோரா • இந்தியக் குடைவரைக் கட்டிடக்கலையின் முன்னோடி ஆக விளங்குகிறது. சரணந்திரிக் குன்றுகளின் நிலைக்குத்தான பாறைகளில் குடையப்பட்டுள்ள 34 குகைகள் இங்கே உள்ளன. அந்தக் குகைகளிலே பௌத்த, இந்து மற்றும் சமணக் கோயில்களும், துறவு மடங்களும் அமைந்துள்ளன. இவை கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்கும் 10 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் அமைக்கப்பட்டவை. 12 பௌத்த குகைகள் , 17 இந்துக் குகைகள் மற்றும் 5 சமணக் குகைகள் அருகருகே அமைந்துள்ளதானது அந்தக் காலத்தில் நிலவிய சமயப் பொறையை எடுத்துக் காட்டுவதாகக் கருதப்படுகின்றது. இது இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட சின்னமாகும்.



இந்த இரு படங்களிலும் 5 வித்தியாசங்கள் உண்டு. கண்டுபிடியுங்கள். பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவனி போகின்றாள்

பாசத்தோடு வளர்த்த மகள்
பவனி போகின்றாள்
பாலூட்டி வளர்த்த அன்னை
வயிறு எரிந்து நிற்கின்றாள்

காலால் நடந்த மகள்
தோளில் செல்கின்றாள்
கண்களெல்லாம் குளமாகி
கண்ணீர் மழை சிந்த
பொன்னுமகள் பூமிக்குள்
மறைகின்றாள்

எழுதுகோல் பிடித்து -உன்
பிரிவை எழுத கோலும்
கலங்குதம்மா
வார்த்தைகளும் குளறுதம்மா

களையடுக்க மறந்தோமம்மா
கலாசாரம் காடுபிடித்துவிட்டதம்மா
குள்ள நரியும் வெறி நாயும்
குடிபுகுந்து விட்டதம்மா

பிணம் தின்னி கழுகுக்கும்
நியாயம் வேணுமம்மா
பணம் தின்னி முதலையின்
வாதமம்மா

நீதி செத்து ரொம்ப நாளானதம்மா
அதை இன்னொரு முறை
இன்று புதைத்தோம்மம்மா

மருதுரன் கவி



## சிந்திவிடாதே



அடி என்னவளே ! -உன்
கருவிழி மேகங்கள்
கண்ணுக்குள் மோதிக்கொண்டு
கருங்குளத்து நீர்
கன்னங்களில் வழியும் போது - என்

இதயக் குளத்தின்
செந்நீர் சிதறி
சாலையில் ஓடுதடி- என்னை
சோகத்தில் வாட்டுதடி.

வழிகின்ற நீர் - உன்
வாய்க் கமலத்தில்
வடிந்து விட்டால் - நீ
மகிழ்ச்சியால் சற்று சிரித்து விட்டால் - என்

இதயத்தின் நீரெல்லாம்
ஓட மறுத்து
ஒரு நிமிடம் உறைந்து
உன் அழகை ரசிக்குதடி
உன்னை முத்தமிட துடிக்குதடி

கண்கள் தான் காதலின் பிறப்பிடம்
கவிஞர்கள் சொல்கிறார்கள் - உன்
கண்ணீரல்லவா என் உயிரின் இருப்பிடம்
நான் சொல்கிறேன்.

சிந்தி விடாதே - என் செல்லமே !
கண்ணீரை மட்டுமல்ல - என்
காதலையும் தான்.

மதி



## கண்ணீர் பயணம்

கண்ணீர்ப் பயணம்
அன்று..
நான்
கடல்மடி தேடும் காட்டாறாய்...

நேற்று..
அவள்
தாகம் தீர்க்க வந்தவள்
தடுப்பனை கட்டிச் சென்றாள்...

இன்று..
நான்
பாதை தொலைத்தவனாக
பயணம் முடிந்தவனாக

இனி
கடல்மடித் தேடி
என் கண்ணீர் துளிகளின் பயணம்

சேரன்

## உன் காதல்

இன்று வரை....
இதுவரை பிழை ஏதும்
செய்யவில்லை...
என் விழிகள் உனைக்
கண்டதைத் தவிர...

சுமை ஏதும் இல்லை
என் இதயத்தில்..
உன் நினைவுகள்
தோன்றியதைத் தவிர....

பெரிதாய் ஒன்றும்
வலிக்கவில்லை
என் மனதில்.. உன்
பிரிவொன்றைத் தவிர...

வரமாய் ஏதும் கிடைக்கவில்லை
என் வாழ்வில்..
உன் காதல் ஒன்றைத் தவிர...

## அனுபவிக்கிறேன்

என் காதலுக்கு ...
என் கண் தான் கண்டம் ....
பார்த்தேன் அனுபவிக்கிறேன் ....!!!

நான் உன் மூச்சு ....
நீ கடைசி மூச்சு ...
விடும் வரை -நான்
இருப்பேன் .....!!!

நீ காதலை விட ..
அழகானவள்
உன்னிடம் காதல் ....
எப்போது வரும் ....?

வாணி



## வாழ்வது எப்படி

சிலவேளை
மனிதர்கள்
கொடியவர்கள்தான்
மனிதனையே
மனிதன் தின்னும்
காலமிது

ஓநாய்களால்
வேட்டையாடப்படும்
இரவுகளால்
மனித மரபணுக்கள்
கொல்லப்படுகின்றன

ஊழையிடும்
நரிகள்
தொழிலதிபர்களாய்
தொழிலாளர்
வாழ்வியலில்
நித்திரையில்லாத
பொழுதுகள்

குடிகாரனைப் போல்
மனநோயாளி
யாருமில்லை
அது தானே
அடிக்கடி
சண்டைகள்
எம் பூமியில்
மலிந்து விட்டன

மயான வெளியே
வெறித்து விட்டது
சுவாசத்தின்
பதிவலைகளை
எங்கே தேடுவது

காலப் பெருவெளியில்
கண்ணீர்தான்
வாழ்வெனில்
மனிதனை
மனிதன் தின்னும்
காலத்தில் வாழ்வது
எப்படி?

செல்வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

● ஹரன் சுபேஷ்



# வசந்தத்தைத் தேடி...

வானச் சூரியன் மறைந்து விட்ட பொழுது, மீன் பிடிக்கும் வலையை எடுத்துக் கொண்டு கடலுக்குச் செல்ல ஆயத்தமான செல்லத்துரை யை நோக்கி நல்லம்மா. இரவு கடலுக்குப் போனால் நாளை காலை தான் கரைக்குத் திரும்ப முடியும் என்பதால் இரவுச் சாப்பாட்டையும், குடிநீரையும் கையோடு எடுத்துப் போவது வழக்கமாகையால் அவற்றைக் கணவ னிடம் கொடுத்தபடி "இன் னிக்கு கடலுக்குப் போய் தான் ஆகணுமா?" என்று கேட்டாள் நல்லம்மா.

அவளிடமிருந்து சாப்பாட் டையும், தண்ணீ ரையும் வாங்கிக் கொண்டு விட்டு "எல்லாம் தெரிஞ்ச நீயே இப்படிக் கேட்கலாமா நல்ல ம்மா? ரெண்டு நாளா ஒரே மழையும் காத்துமா இருந்த தால கடலுக்குப் போக முடி யல. அதனால இப்ப கையில காசில்ல. நேத்து ராத்திரி முழுக்க அம்மா இருமிக்கிட்டே இருந்திச்சு. அதுக்கு மருந்து வாங்கவேணும். போர்வைக்குள் சுருண்டு படுத்திருந்த தன் தாயைப் பார்த்தான். பிறகு ஒரு பெருமூச்செறிந்து விட்டு "அதுவுமில்லாமல் நீ வேற நிறைமாச மாக இருக்கிறாய். நாளைக்கு உனக்குப் பிரசவம் ஆயிருச்சின்னா அதுக்கும் கையில காசு வேணாமா?" என்று கேட் டான் அவள் கணவன்.

"நீங்க சொல்கிறதெல்லாம் சரிதாங்க. ஆனா ரெண்டு நாளா அடிச்ச காத்து இப்பத்தான் ஓய்ச் சிருக்கு. அதுக்குள்ள கடலுக்குப் போறதி னாலே எனக்குப் பயமாய்க் கிடக்குது".

"இதப்பாரு நல்லம்மா! இதை யெல்லாம் பார்த்தா இப்ப முடியுமா? சந் தோசமாக வாழுற துக்கு சம்பாதிக்க வேண்டாம் என்றால் இன்னிக்கு வேணாம் நாளைக்கு வேலைக்கு போகலா மென்னு தள்ளிப் போடலாம். ஆனா நம்மள மாதிரி இன் னிக்கு வேணாம். நாளைக்குப் போகலாமென்னு எதையும் தள்ளிப் போட நம்மால முடியாது" என்றான் செல்லத்துரை.

கணவன் சொல்வதிலிருந்து நியாயம் நல்லம்மாவிற்குப் புரிந்ததினால் தொழி லுக்குப் போகிற கணவனை கஷ்டப்படுத்தக், கூடாது என்று நினைத் தவள் "நடுக் கடலுக்குப் போறீங்க பத்திரமாய் போயிட்டு வாங்க. நீங்க திரும்பி வரும் வரைக்கும் உங்களுக்காக ரெண்டு பேரு தங்கட உசுரைக் கையில பிடிச்சுக் கிட்டு காத்தி ருக்கிறத மறந்துவிடாதீங்க" என்றாள். "அதை நான் மறப்பனா? முன்னெல்லாம் நீயும் அம்மா வும் மட் டும் தான். இப்ப இன்னொரு ஆளும் காத்திருக்கிறார். நீங்கள் எல்லோரும் எனக் காக இருக்கிறியள் என்ற நினைப்புத் தானே நடுக்கடலில் எனக்குத் துணையாயி ருக்குது" என்று கூறிச் சிரித்தான் செல்லத் துரை.

அவனுக்காக காத்திருக்கும் அந்த இன்னொரு ஆள் யாரென்ற உண்மை தெரிந்தபடியால் வெட்கத்தால் தலை குனிந்த நல்லம்மாவிடம் விடை பெற் றுக் கொண்டு தன் நண்பர்கள் இருக்கு மிடத்தை நாடிப் போனான் செல்லத் துரை. கடற்கரை யோரத்தில் இரண்டு, மூன்று கட்டு மரங்க ளோடு செல்லத்துரைக்காககாத்துக் கொண்டி ருந்த மீனவ நண்பர்கள் அவனை இன்னும் காணவில்லையென்று புலம்பிக்கொண்டிருக்கும் போதே அங்கு போய்ச் சேர்ந்தான் செல்லத்துரை. "என்னடா இப்படி ஆடி அசைந்து நேரங்கழிச்சு வாராய்?" என்று எரிச்சலுடன் கேட்டான் ஒருவன்.

"சரி! சரி! எற்கனவே நேரம் போகுது தரைக் காத்து அடிக்கையில போனாத் தான் கடலுக்குள் போறதுக்கு வசதி யாய் இருக்கும். என்று செல்லத்துரை கூறவும் வேறு பேச்சின்றி கட்டுமரங்களை கடலுக்குள் தள்ளி விட்டு தாங்க ளும் ஏறி அமர்ந்து கொண்டு துடுப்புப் போட ஆரம்பித்தார்கள் அவர்கள்.

கட்டுமரமொன்றில் ஆளுக்கு இரண்டு பேராக இருந்து கொண்டு மூன்று கட்டுமரங்களில்வானத்து நிலவேவிளக்காய் எரிய, தங்கள் குடும்பம் ஒரு வேளை உணவாவது வயிறார உண்பதற்கு, தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஆழ்கடல் தேடிப் புறப்பட்டார்கள் அந்த மீனவர்கள். கடலைப் பார்க்கும் போ தெல்லாம் தான் சிறுவனாக இருந்த போது தாயிடம் கேட்ட கேள்விகளும் அதற்கு அவள் சொன்ன பதில்களும் தான் செல்லத்துரைக்கு ஞாபகம் வரும்.

"ஏம்மா கடலுக்குள் போறவங்க எல்லாம் துடுப்புப் போடுறாங்களே. கடலம்மாவிற்கு வலிக் காதா?" என்று கேட்பான் செல்லத்துரை.

அதற்கு அவன் தாய் சிரித்துக் கொண்டே "என்ன தான் பிள்ளைங்க தாய்க்கு வேதனை கொடுத் தாலும் பெற்றதாய் அதை பொறுத்துக்கொள்வாள். அப்படித்தான் கடலம்மாவும், தன்னுடைய பிள்ளைகளான மீனவர்கள் என்ன வலியைக் கொடுத்தாலும் அதைப் பொறுத்திக்கிட்டு அவர்கள் வாழ்வதற்கு மீன்களைத் தருகிறாள்" என்று கூறுவாள்.

மறுபடியும் செல்லத்துரை "நாங்க எல்லாம் கடலன்னையின் பிள்ளைங் கன்னா அவளின் வயித்துக்குள்ள வாழுற மீன்களும் அவளோட பிள்ளைங்கதானே. அந்தப் பிள்ளை களை நாங்க எடுத்திட்டு வர கடலம்மா எப்படியம்மா சம்மதிக் கிறாள்?" என்று கேட்பான்.

அவனுடைய தாய் அவனை ஆச்சரியமாய்ப் பார்த்து விட்டு "நல்ல கேள்வி தான் கேட்கிற. கடல் தாய் எல்லோருக்கும் பொதுவானவள். யாரிடத்தி லும் பாரபட்சமில்லாதவள். எங்களை உனக்குள் வாழவிடு என்று மீன்கள் கேட்டால் ஆகா என்று சந்தோசமாய் அனுமதிப்பாள். அதைப் போல நாங்களும் போய் மீன் பிடிக்காவிட்டால் எங்களுக்கு வேறு வேலை தெரியாது. இது தான் எங்கள் வாழ்வின் ஆதாரம். அதனால எங்களை மீன்பிடிக்க விடு என்று கேட்டால் அதையும் மறுப்பு சொல்லாம ஏற்றுக் கொள்வாள். செல்லத்துரை தனது பழைய நினைவு களில் மூழ்கி இருந்த பொழுது அவர்கள் நடுக்கடலை அடைந்திருந்தனர்.

மறுநாட் காலை கடற்காற்று தரையை நோக்கி வீசும் நேரம் இரவு முழுவதும் மீன் பிடித்துவிட்டு கரையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந் தனர்.

ராத்திரியில் எந்தவிதப் பிரச்சி னையுமில் லாமல் அமைதியாயிருந்த படியாலும் எதிர்பார்த் ததை விட ஏராளமான மீன்கள் கிடைத்தபடியா லும் எல்லோருமே மிகுந்த சந்தோ ஷத்திலிருந் தனர். "அம்மா வுக்கு மருந்து வேண்டலாம். நல்லம்மாவிற்கு நல்லபடியாக பிரசவம் பாக் கலாம்என்று நினைத்து மகிழ்ந்தான் செல்லத்துரை.

மனது நிறைந்த மகிழ்ச்சியோடு கரையை நோக் கிச் சென்றவர்கள் கரை கண்ணுக்குப் புலனா னதும் அதிர்ச்சியுற்றனர். ஏனென்றால் கடற் கரை முழுவதும் அலங்கோலமாயிருந்தது. எப்போதும் கரையில் நின்று கொண்டிருக்கும் ஏனைய கட்டு மரங்களை யும், படகுகளையும் காணவில்லை. கடற்கரையோரத்திலிருந்த அவர்களின் வீடுக ளையும் காணவில்லை. அதற்கு மாறாகத் தண்ணீ ரில் மிதக்கும் வீட்டுக்கூரைகளையும் மனித உடல்களையும் தான் அவர்கள் கண்டனர். என்ன நடந்தது? அவர் களுக்கு எதுவுமே புரியவில்லை. கரையை நெருங்க நெருங்க மரண ஓலங்களும், கண்ணீர்க் கதறல் களும் தான் கேட்டன. கரையை அடைந்த வர்கள் தத் தமது வீடிருந்த திசை நோக்கி ஓடினர்.


செல்லத்துரையும் தனது வீட்டைத் தேடி ஓடினான். அவனது வீட்டையும் காண வில்லை. "அப்பா! அம்மா! நல்லம்மா!" என்று கத்திக் கதறிய வண்ணம் அங்குமிங்கும் ஓடினான் செல்லத்துரை. "என்ன நடந்தது? என்று அங்கே சூழ்ந்திருந் தவர்களிடம்கேட்டான். தண்ணீருக் கிடையில்கண்ணீரோடுதங்களின் உறவுகளைத் தேடியவர் பொங்கியெழுந்து, வீட்டோடு சேர்த்து மனிதர்களையும் இழுத்துச் சென்ற கொடுமையை அவர்கள்கூறினார்கள். "நீங்கவர்றவரைக்கும் என் உயிரைக் கையில பிடிச்சபடி இருப்பேன்னு சொன்னியே இப்ப நான் வந்திட்டேன். பிடிச்சுக் கிட்டு போயிட்ட நல்லம்மா?" என்று கோவிக் கோவி அழுதான் செல்லத்துரை. "அம்மா! நாம தப்புப்பண்ணினா கடலம்மாவிற்கு கோபம் வந்து பொங்கியெழுந்துடுவான்னு சொன் னியே. இப்ப நாம என்னம்மா தப்பு செஞ்சோம்? இப்படி எங்க ளிடம் இருந்து எல்லாத்தையும் பறிச்சுக் கிட்டு போயிட்டாவே என்று கதறியழுதபடி கேட்ட வனின் கேள்விகள் இனி வரும் காலத்திலும் பதில் சொல்லவும் முடியாது. பதில் சொல்ல அவன் தாயும் அங்கில்லை. இனிவரும்காலத்தில் எத்தனையோ மாலைப்பொழுது வரலாம். எத்தனை யோ முறை தரைக் காற்று கடல் நோக்கிவீசலாம். செல்லத்துரையின் வாழ்வில் இனி ஒளி வீசுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்கால் கதைத்தல் ஒரு குறைபாடா?

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்




'மூச்சடையான் என்று எல்லோரும் பகடி பண்ணுறாங்களாம். இவன் பள்ளிக்கூடத்திற்கே போகமாட்டன் என்று அடம் பிடிக்கிறான்'.

'கோச்சடையான்' வந்த நேரம் இவனை மூச்சடையான் ஆக்கிவிட்டார்கள்.

இவன் பேசினால் சொற்கள் தெளிவாக வருகுதில்லை. ஙா ஙா என்று குரல் அடைச்சுக் கொண்டு அண்டங் காக்கா கத்துவது போல வருகிறது.

மூக்கால் கதைப்பவர்களை நீங்கள் எங்காவது சந்தித்திருப்பீர்கள். ஏன் உங்கள் வீட்டில் கூட யாருக்காவது ஒரு சமயத்தில் அவ்வாறான சத்தம் வந்திருக்கலாம். ஆம் பெரும்பாலன அத்தகைய குரல் மாற்றங்கள் தற்காலிகமானவை. சிறிது காலத்தில் தானாகவே மாறிவிடும். வேறு சிலருக்கு குணமடையக் கூடிய காலம் எடுக்கும்.

ஆனால் சிலர் குழந்தைப் பருவத்தில் பேசத் தொடங்கிய காலத்திலிருந்தே அவ்வாறே தொடர்ந்து மூக்கால் பேசுவதைக் காணலாம். இவற்றில் பெரும்பாலனவற்றை பொருத்தமான சிகிச்சை மூலம் மாற்றிவிடலாம். மிகச் சிலவே சிகிச்சைக்கு போதிய பலன் கொடுக்காதவையாக இருக்கும்.

### எவ்வாறு ஏற்படுகிறது

ஒருவர் பேசும் ஒலியானது வாயிலிருந்து வருகிறது என்றே நாம் எண்ணுகிறோம். ஆனால் நாம் பேசும்போது காற்றானது உண்மையில் வாயினூடாக மட்டுமின்றி மூக்கின் ஊடாகவும் வெளியேறுகிறது. மூக்கினாலும் வாயினாலும் வெளியேறும் காற்றின் அளவு சரியான விகிதாசாரத்தில் அமைந்திருந்தால் மட்டுமே குரல் இயல்பானதாக இருக்கும். இவற்றின் அளவில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதே குரல் ஒலிமாற்றங்களுக்கும் மூக்கால் பேசுவதற்கும் காரணமாகும்.

குரல் அடைப்பதும் கரகரப்பான தொனியில் பேசுவதும் முற்றிலும் வேறானது. அது குரல் வளையில் ஏற்படும் பிரச்சினைகளால் ஏற்படுவதாகும்.

### இரண்டு வீகை மூக்கால் பேசுதல்

மூக்கால் பேசுவதில் இரண்டு அடிப்படை வகைகள் உண்டு.

முதலாவது வகையில், பேசும்போது மூக்கின் ஊடாக வெளியேறும் காற்றின் அளவு குறைந்திருக்கும். அதை hyponasal speech என்பார்கள். அதாவது பேசும் போது நாசின் பங்களிப்பு குறைவாக இருக்கும். இவ்வகைப் பேச்சு பெரும்பாலும் சளி, மூக்கடைப்பு, சைனஸ் பிரச்சனை, மூக்கு எலும்பு வளைவு போன்றவற்றால் ஏற்படும்.

இரண்டாவது வகையில் ஒருவர் பேசும்போது தேவைக்கு அதிகமான அளவு காற்று மூக்கின் ஊடாக வெளியேறுவதால் குரல் ஒலி வித்தியாசமாக ஒலிக்கும். இதை hypernasal speech என்பார்கள். இது பொதுவாக பிறப்பில் இருந்தே வருவதாக இருக்கும். பிளவுண்ட அண்ணத்துடன் (Cleft palate) பிறப்பவர்களை முக்கிய உதாரணமாகச் சொல்லலாம்.


### காரணங்கள் எவை?

காரணங்கள் பல வகைப்படலாம்.

சுவாச மேற்தொகுதியில் கிருமித் தொற்று

முக்கிய காரணம் மூக்கு தொண்டை ஆகிய சுவாசத் தொகுதியின் மேற்பகுதியில் கிருமித் தொற்றால் ஏற்படும் சளி போன்ற அறிகுறிகள்தான். ஆயினும் சளி ஏற்படும் அனைவருக்கும் மூக்கால் பேசுவது போன்ற குரல் மாற்றம் ஏற்படும் என்றில்லை.

அது நாட்பட்ட சைனஸ் நோயாக (sinusitis) மாறும்போதே இது பெரும்பாலும் நிகழ்கிறது. நாசின் இருபுறங்களிலும் உள்ள காபால எலும்பில் காற்றறைகளில் (paranasal sinuses) கிருமித் தொற்றும் அதன் விளைவாக அழற்சியும் ஏற்படுவதை சைனஸ் பிரச்சனை என்போம். இது மீண்டும் மீண்டும் ஏற்பட்டு நீண்ட காலத்திற்கு தொடரும்போது இது (chronic sinusitis) ஆக மாறும். இதன்போது அந்தக் காற்றறைகளில் உள்ள மென்சவ்வுகள் தடிப்படைந்துவிடும். இது மூக்கால் பேசும் குரல் மாற்றத்திற்குக் காரணமாகும்.




### ஒவ்வாமை அழற்சிகள்

தூசு, சுவாத்திய மாற்றங்கள், கடுமையான மணங்கள், மகரந்தம் போன்றவை பலருக்கு ஒவ்வாமை அழற்சியை மூக்கில் ஏற்படுத்தும். இதனால் மூக்கால் நீர்வடிதல், மூக்கடைப்பு, தும்மல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். இதன் தொடர்ச்சியாகவே குரல் மாற்றம் நிகழும். ஆயினும் இது தொடர்ச்சியாக நீடிக்காது. தற்காலகமாக வந்து மாறும்.

### அடினொயிட் வீக்கம்

'அடினொயிட்' வீக்கம் மற்றொரு காரணமாகும்.

'அடினொயிட்' என்பது எமது நாசியின் பின்புறத்தே அண்ணத்தில் உள்ள நிணநீர் கட்டியாகும். கிருமித் தொற்றுகளால் இது வீக்கமடையும். நீண்டு தொடரும் இப் பிரச்சனையால் குறட்டை, மூக்கால் பேசுதல் போன்ற அறிகுறிகள் தோன்றும். 'அன்ரிபயோரிக்' மூலம் இதைக் கட்டுப்படுத்துவது முடியாது. பெரும்பாலும் சத்திர சிகிச்சை தேவைப்படும்.

### மூக்கின் இடை எலும்பு வளைவு

எமது மூக்கின் இரு பக்கங்களையும் எலும்பு மற்றும் குருத்தெலும்பு ஆகியவற்றால் ஆன Septum இரண்டாகப் பிரிக்கிறது. இது எப்பொழும் சரிசமமாக மூக்கைப் பிரிப்பதில்லை. ஒரு பக்கமாக கூடுதலாக வளைந்திருக்கலாம். அவ்வாறு வளைந்திருப்பதையே மூக்கின் இடை எலும்பு வளைவு (Deviated nasal septum) என்கிறோம். இதனால் மூக்கடைப்பு, குரல் மாற்றம், குறட்டை, சைனஸ் தொற்றுநோய் போன்ற பல அறிகுறிகள் தோன்ற வாய்ப்புண்டு.

மூக்கெலும்பு வளைவு

(18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்து கொண்டிருக்கிறது...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

'மியூசிய'த்தில் போய் உட்கார்ந்துவிடவேண்டியதாகிவிட்டது.

புரட்சி செய்தவர்கள் எல்லோரும் எங்கெங்கோ 'செட்டில்' ஆகிவிட, புதிய புரட்சியாளர்கள் நான்கு காரணங்களுக்காக ஆயுதம் ஏந்திக் களத்தில் இறங்க ஆரம்பித்தார்கள்.

அரசியல் ரீதியிலான அடக்குமுறை. மத ரீதியிலான தாக்குதல்கள். இனக்குழு ரீதியிலான ஒழிப்புநடவடிக்கைகள். பொருளாதார ரீதியிலான சுரண்டல்கள் என்று பிரிட்டன.

இது ஒவ்வொன்றுமே மிக விரிவாகப் பார்க்கப்பட வேண்டிய விஷயங்கள். ஏனெனில் நல்லதும் கெட்டதும் கலந்து ஜனநாயகம் கொடுத்த பரிசுகளில் இவை நான்குமே மிக முக்கியமானவை.

இன்றைக்குத் தீவிரவாத இயக்கம் என்று முத்திரை குத்தப்பட்டுள்ள எந்த ஓர் அமைப்பை எடுத்துக்கொண்டாலும், மேற்சொன்ன நான்கு காரணங்களுள் ஒன்றை முன்வைத்துத்தான் அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது புரியும்.

மத்தியக்கிழக்கு தேசங்களின் எண்ணெய் வளத்தைச் சுரண்டுவதற்காகவே அந்தப் பகுதியில் ஏதாவது காரணம் சொல்லி வந்து கூடாரம் அடித்து உட்கார்ந்து, காலி செய்ய மறுக்கும் பலம்பொருந்திய நாடுகளை விரட்டி ஒழிப்பது ஒன்றே குறி என்று சொல்லித்தான், அல்கொய்தா உருவானது. ஆனால் கடைசியில் அது சென்ற பாதை வேறு. அது வேறு கதை.

அயர்லாந்தில் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்காகவே உருவானதுதான் 'ஐரிஷ் ரிபப்ளிகன் ஆர்மி'.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் உலகையே உலுக்கிய ருவாண்டா இனப் படுகொலைகள் நினைவிருக்கிறதா? 80,000 அப்பாவி மக்கள் இறந்துபோனது சரித்திரத்தின் பழைய பக்கங்களாகிவிட்டது.

இதற்குக் காரணமான 'இண்டரம்வெ' இயக்கத்தின் செயல்களை எதனைக் கொண்டு நியாயப்படுத்த முடியும்? முன்சொன்ன நான்கு விஷயங்கள்தான். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரணம். ஒவ்வொரு சித்தாந்தம்.

கொள்கைகளும் கோட்பாடுகளும் வேறு வேறாக இருந்தாலும் உலகை நிரந்தர அச்சத்தில் இவர்கள் நிறுத்திவைத்திருப் பதை மட்டும் யாருமே மறுக்கமுடியாது.

என்ன செய்கிறார்கள் என்பதை விடவும், எப்படிச் செய்கிறார்கள் என்பதில்தான் விசேஷம்.

இந்த இடத்தில்தான் ஐ.எஸ். மற்றைய அமைப்புகளிலிருந்து வேறுபடுகின்றது.

அவர்கள் ஏன் செய்கிறார்கள் என்பதை விட என்ன அதை எப்படி செய்கிறார்கள் என்பதில்தான் அவர்கள் மீதான கோரம் அதிகரிக்கிறது.

ஐ.எஸ். ஏன் செய்கிறது?
என்ன செய்கிறது?
எப்படிச் செய்கிறது?

(தொடரும்)

# மூக்கால்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சனையானது மிகவும் பரவலாகக் காணப்படுகிறது. சிறியதாக பெரியதாகவோ 80 சதவிகிதமான மக்களில் இது காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெரும்பாலும் இது பிறவிக் குறைபாடே என்றபோதும் விழுந்து அல்லது அடிபட்டு சேதம் அடைவதாலும் மூக்கு எலும்பு வளைவதுண்டு.

இருந்தபோதும் மிகப் பெரும்பலானோரில் மூக்கு எலும்பு வளைவினால் எந்தவித பாதிப்புகளும் ஏற்படுவதில்லை. சத்திரசிகிச்சை மூலம் வளைவைச் சரிசெய்யலாம்.

### ரெபுனேட் பொருமல்
### (Turbinate Hypertophy)

இதுவும் குரல் மாற்றங்களுக்குக் காரணமாகலாம். எமது மூக்கின் உட்புறத்தைப் பார்த்தால் அங்கு கட்டிபோல எலும்பு துருத்திக் கொண்டிருப்பதைக் காணலாம். மூக்கின் ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று 'ரெபுனேட்' இருக்கின்றபோதும் கீழே உள்ளதே பெரும்பாலும் தெரியும். மூக்கினுள் செல்லும் காற்றை ஈரலிப்பாகவும் வெதுவெதுப்பாகவும் வைத்திருக்க இது அவசியமானதாகும்.

இது வழமையைவிட அதிகமாக வீக்கமடையும்போது மூக்கடைப்பு, மூக்கால் நீர் வடிதல், மூக்கால் பேசுதல் போன்ற பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும். தாக்கம் அதிகமானால் சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

### மூக்கினுள் நீர்க்கட்டி

'சைனஸ்' தொற்று நோய் மற்றும் ஒவ்வாமையால் ஏற்படும் அழற்சி காரணமாக மூக்கில் பொதுவாக நீர்க்கட்டிகள் (Nasal polyps) தோன்றுகின்றன. இவை காற்றின் பாதைக்கு தடையாக இருப்பதன் காரணமாக குரலில் மாற்றம் ஏற்படுகிறது. ஒவ்வாமைக்கான மாத்திரைகள், மூக்கிற்கான ஸ்டிரொயிட் ஸ்ப்ரே மருந்துகளை உபயோகிப்பதன் மூலம் அவற்றைக் குணப்படுத்தலாம்.

### அந்நியப் பொருட்கள்

குழந்தைகள் மூக்கினுள் ரபர் துண்டுகள், குண்டுமணி போன்றவற்றை விளையாட்டாக வைத்துவிடும்போதும் காற்றின் பாதை தடைப்பட்டு குரல் மாற்றம் அடையலாம். ஆயினும் மூக்கு அடைப்பு, மூக்கிலிருந்து துர்நாற்றம் வீசுவது போன்ற அறிகுறிகளே இங்கு மேலோங்கியிருக்கும்.

### அரிதான காரணங்கள்

பிளவுண்ட அண்ணம், வேறு பல குறோமோசோம் நோய்கள், போலியோ, மையஸ்தீனியா கிறாவிஸ், போன்ற பல்வேறு காரணங்களாலும் மூக்கால் பேசுதல் ஏற்படக் கூடும். ஆயினும் அவை மிக அரிதாகவே ஏற்படும் நோய்களாகும்.

அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

மூச்சனையானுக்கு அடினொயிட் வீக்கம் இருந்தது. காது மூக்கு தொண்டை நிபுணரிடம் அனுப்ப வேண்டியதாயிற்று.

அவனிடம் இருந்த தாழ்வுமனப்பான்மை அகன்றது. 'பாடசாலைக்குப் போகாதே' என வேறு காரணங்களுக்காகத் தாய் தடுத்தாலும் கேட்கிறான் இல்லை. நட்டுப்பிடிக்க போயே விடுகிறான்.

# பூகோள அரசியலில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்குநாடுகளுக்கும் இன்னும் இன்னும் எரிச்சலை ஊட்டின. அது, நாம் ரசிக்காத மஹிந்த ராஜபக்ஷவுக்கே பெரும் ஒத்துழைப்புக்களை வழங்கி விடுதலைப் புலிகளை விரைவாக அழிக்க வைத்தது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகளுக்கு எதிரான பூகோள அரசியல் சக்திகள் (சீனா சார்பு என்றும் கொள்ளலாம்) இலங்கை அரசியலில் வெளிப்படையாக அல்லது நேரடியாக தலையிடுவது போல எப்போதுமே காட்டிக்கொண்டது இல்லை.

ஆனால், அவர்களின் தலையீடு என்பது தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கின்றது. இலங்கையில் எந்த அரசாங்கம் ஆட்சி பீடமேறினாலும் மறைமுகமாக அதற்கு ஒத்துழைத்து வந்திருக்கின்றன. 2005 தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றிருந்தாலும் கூட, சீனா இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கும்.

ஆனால், அந்த ஆதிக்கத்தின் அளவு ஓரளவுக்கு குறைந்திருக்கும். இந்தியப் பிராந்தியத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகள் வெளிப்படுத்தும் மேலாதிக்கம் என்பது காலனித்துவ காலத்து மனநிலை. அந்த கையாள்கையே சில நேரங்களில் அவர்களை பூகோள அரசியலில் தோற்றுப்போகவும் வைத்திருக்கின்றது.

பூகோள அரசியலில் தெற்காசியப் பிராந்தியம் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ, அதேயளவுக்கு (ஈழத்) தமிழர்களும் முக்கியத்துவம் பெறுகின்றார்கள்.

தமிழ் மக்கள் தென் இந்தியா, வட இலங்கைப் பிராந்தியங்களில் பரவியிருக்காவிட்டால் இவ்வளவு இன்னல்களைப் பெற்றிருக்க வேண்டியதில்லை என்கிற பேச்சு உண்டு. அதில், குறிப்பிடத்தக்களவிலான உண்மையும் இருக்கின்றது. வரலாற்றுக் காலம் தொட்டே இந்த முக்கியத்துவம் இருந்து வந்திருக்கின்றது.

பூகோள அரசியலில் தமிழ் மக்களின் முக்கியத்துவம் என்பது கருவி நிலைக்கு மாற்றப்பட்ட தருணமே பெரு வீழ்ச்சிகளை பெற்றுக் கொடுத்தது. கருவிகளாக இன்றி கையாளுகைத் தரப்பாக மாறியிருந்தால் பெரு வெற்றிகள் சாத்தியப்பட்டிருக்கும்.

அல்லது, ஆதிக்கம் பெற்ற தரப்பாகவே தொடர்ந்தும் இருந்து வந்திருக்கலாம். பல நேரங்களில் பூகோள அரசியலின் போக்கினை உள்வாங்குவதைத் தவிர்த்து சுயாதீனமாக நாம் செயற்படுகின்றோம் என்ற எத்தனிப்புக்களை வெளிப்படுத்த ஆரம்பித்தமையும் தோல்வியாக முடிந்து போயிருக்கின்றது.

சுயாதீன எழுச்சி என்பது வரவேற்கப்பட வேண்டியதுதான், ஆனால், எம்மைச் சுற்றியுள்ள சக்திகளின் போக்குகள் தொடர்பில் அறிய மறுப்பது சரியான அரசியல் போக்கு அல்ல. அது, காலந்தோறும் எம்மை போட்டு மிதித்து வந்திருக்கின்றது.

பழைய கதைகளுக்கு அப்பால், இன்றைய சூழ்நிலைக்கு வந்தால், இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் வரையிலான காலம் வரை தமிழ் மக்களின் தேவை என்பது இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளுக்கு அவ்வளவு அவசியமாக இருந்தது.

ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னரான மனநிலை என்பது தமிழ் மக்களை அடக்கி வைத்துவிட்டு தனக்குச் சார்பான ஆட்சியாளரைத் தாங்கிப்பிடிக்க வைத்திருக்கின்றது. இப்போது இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுக்கு மிச்சமிருக்கும் தேவை, பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை உருவாக்கிவிடுவது. அதற்கான ஒத்துழைப்பையும் தமிழ்த் தரப்பிடமிருந்து பெற்றுக்கொள்ளும்.

பேரழிவுகளிலிருந்து மீட்சி குறித்து சிந்திக்கத் தலைப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் வேகமாக முன்னோக்கி நகர வேண்டிய காலகட்டம் இது. வரும் பொதுத் தேர்தல் களம் முதல் அதன் பின்னரான நிகழ்வு மாற்றத்தினையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டும். அதற்கு பூகோள அரசியலின் போக்கினை முற்றுமாக உணர வேண்டும்.

தமிழ் மக்களிடம் காலம் காலமாக யதார்த்த சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு செயலாற்றுவதற்கான கால அவகாசம் இருந்ததில்லை. ஏனெனில், அதனை முந்திக்கொண்டு உணர்ச்சி மேலிடுகை முடிவுகளை எடுத்துவிடும். இப்போது, உணர்ச்சி மேலிடுகைக்கு பதிலாக யதார்த்த களத்தினை முன்னிறுத்தி வெற்றிகரமாக இயங்க வேண்டும். அதுவே, வெற்றிகரமான புள்ளியை நோக்கி நகர்த்தும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் கஹவத்தை மர்மக் கொலைகள்!





காலத்துக்கு காலம் அறிவியல் வளர்ச்சியில் பல்வேறு விதமான ஆராய்ச்சிகள், விசாரணைகள் என்பன புதிய கோணங்களில் முன்னெடுக்கப்பட்ட போதிலும் சில சம்பவங்கள் ஏன்? எதற்காக? யாரால்? மேற்கொள்ளப்படுகின்றன என்ற சரியான விடையின்றி தீராத மர்மங்களாகவே நீடித்துக்கொண்டு செல்கின்றன.

அந்த வகையில் இலங்கையில் இரத்தினபுரி, கஹவத்தை பகுதியில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் பெண்களின் மர்ம கொலைச் சம்பவங்கள் இப்பிரதேசம் தொடர்பாக நாடளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் அச்சவுணர்வை ஏற்படுத்தியுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் கஹவத்தை பிரதேசம் இலங்கையில் பெருந்தோட்டத் துறையின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை செய்யும் ஒரு பிரதேசமாகும்.

பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு சொந்தமான தோட்டங்களையும், அதனை அண்மித்த சிங்கள கிராமங்களையும் கொண்ட கஹவத்த பிரதேசத்தில் முதல் முதலில் கஹவத்த கொட்டகெதன, ஓபாத தோட்டத்தை சேர்ந்த 56 வயதுடைய பெண்ணொருவர் 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து 2012 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக கஹவத்த கொட்டகெதன பிரதேசத்தின் வெராபிட்டிய, நிலதுர, திவுல்வெல ஆகிய பிரதேசங்களில் வயதான ஒன்பது பெண்கள் தனித்தனியாக கொலை செய்யப்பட்டு அவர்களது வீட்டிலிருந்து மிக தொலைவிலுள்ள இடங்களில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இதனையடுத்து இம் மர்மக் கொலைகள் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இரட்டைக் கொலை என்ற பரிணாமத்தை பெற்றது.

கஹவத்தை கொட்டகெதன பிரதேசத்தை சேர்ந்த நில்மனி என்ற 52 வயது நிரம்பிய பெண்ணொருவரும், அவருடைய 19 வயதுடைய மகள் சத்துரங்கனியும் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, அதே ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி தயாவதி என்ற 61 வயது பெண்ணும், அவருடன் இருந்த திருமணமாகாத 51 வயதுடைய திலகவதி என்ற பெண்ணும் கொலை செய்யப்பட்டு முற்றாக தீயில் கருகிய நிலையில் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

அந்த வகையில், இவ்வாறு 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை கஹவத்த பிரதேசத்தில் தொடர்ந்து இடம்பெற்று வரும் பெண்களின் மர்மக் கொலைகளை தடுக்கும் முகமாக, இதே ஆண்டு கஹவத்த கொட்டகெதன பிரதேசத்துக் குள்ளேயே பொது மக்களின் பாதுகாப்புக்காக பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டது.

எனினும் துரதிஷ்டவசமாக அதே ஆண்டும் ஜூலை மாதம் 19ஆம் திகதி 65 வயது நிரம்பிய பிரேமலதா, 35 வயது நிரம்பிய அவரது மகள் புஷ்பகுமாரி ஆகியோர் தீயில் எரியூட்டப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதமாகும் போது அதுவரை இடம்பெற்ற மர்மக் கொலைகளின் எண்ணிக்கை 15ஆக அதிகரிக்க, முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன இப்பிரதேசத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

அதன் பின் ஓரிரு மாதங்கள் பெண்களின் மர்மக் கொலைகள் எதுவும் அப்பிரதேசத்தில் பதிவாக வில்லை நிலையில் மீண்டும் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி வெராபிட்டிய, பன்சலை வீதியைச் சேர்ந்த 66 வயதுடைய சந்திராவதி என்ற பெண்ணின் கொலை பதிவானது.

எனினும், இக்கொலைச் சம்பவத்துக்கு பிறகு இரு ஆண்டுகள் இப்பிரதேசத்தில் கொலைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறாமையால் மக்கள் ஓரளவுக்கு நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை உருவானது.

எனினும் இரு ஆண்டுகள் நிம்மதியாக எவ்வித அச்ச நிலையுமின்றி வாழ்ந்த கஹவத்த பிரதேச மக்களுக்கு இவ்வாண்டு ஜனவரி 15ஆம் திகதி மீண்டும் தலையில் இடி வீழ்ந்ததை போன்ற ஒரு சம்பவம் ஓபானவத்தை பிரதேசத்தில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் தமிழ் யுவதியொருவர் கொல்லப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து கடந்த 5ஆம் திகதி மற்றுமொரு பெண் மர்மமான முறையில் காணாமல் போய் நீரோடையொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

39 வயது நிரம்பிய சந்திர மல்காந்தி என்ற மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

கணவன், மூன்று பிள்ளைகள் என்ற சந்திர மல்காந்தினியின் குடும்பத்தில் சம்பவ தினத்தன்று மல்காந்தினியின் பிள்ளைகளின் இருவர் உறவினர் வீடு ஒன்றுக்கு சென்ற நிலையில், கணவனும் 4ஆம் திகதி இரவு ஊரிலுள்ள ஒருவரின் மரண வீட்டுக்கு சென்றிருக்கின்றார்.

இதனைத் தொடர்ந்து தனது 12வயது மகனுடன் நித்திரைக்கு சென்றார் மல்காந்தி. கணவனோ மரண வீட்டிலிருந்து அடுத்த நாள் (2015.04.05) அதிகாலை 1.45 மணியளவில் வந்த போது வீட்டின் பின் கதவு திறந்திருந்தது. மனைவி வீட்டிலிருக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து 12 வயது மகனை எழுப்பி தாய் தொடர்பாக விசாரிக்க அவனுக்கும் தாய் எங்கு சென்றார்? என்னவானார்? என்று நடந்த எதுவுமே தெரியாதிருந்தது.

அதுமட்டுமின்றி, வீட்டின் அனைத்து இடங்களிலும் இரத்தக்கறைகள் காணப்பட்டன, இதனையடுத்து பதற்றமடைந்த மல்காந்தியின் கணவர் வீட்டிலிருந்து 750 மீற்றர் தொலைவிலுள்ள கஹவத்தை கொட்டகெதன பொலிஸ் காவலரணில் தனது மனைவியைக் காணவில்லை என்ற முறைப்பாட்டினைப் பதிவு செய்தார்.

இவ்வாறு சந்திர மல்காந்தியின் கணவரினால் கஹவத்தை கொட்டகெதன பொலிஸ் காவலரணில் பதிவு செய்த முறைப்பாட்டுக்கு இணங்க கொட்டகெதன பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

5ஆம் திகதி இரவு 10.30 வரை வீட்டின் உட்புற பகுதி, சுற்றுப்புற பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போதும் எவ்வித தகவல்களும் சந்திர மல்காந்தி தொடர்பாக கிடைக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது நாளாக கொட்டகெதன பொலிஸாருடன் இணைந்து கடற்படையினரும் தேடுதல் பணிகளில் ஈடுபட்ட போதே, வீட்டிலிருந்து சுமார் 600 மீற்றர் தூரத்திலுள்ள நீரோடையொன்றிலிருந்து சந்திர மல்காந்தியின் சடலம் நிர்வாண நிலையில் மீட்கப்பட்டது.

இதனையடுத்து சடலம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளின் படி, கூரிய ஆயுதத்தினால் தலைப்பகுதியில் பலமாக தாக்கப்பட்டமை காரணமாகவே மண்டை ஓடு பாதிப்புற்று உயிரிழந்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.


எனினும் குற்றவாளி தொடர்பாக இதுவரை எவ்வித சரியான தகவல்களும் கிடைக்காத நிலையில் கஹவத்தை பொலிஸாருடன், கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு கஹவத்தை பகுதியில் பல பெண்களின் கொலைச் சம்பவங்கள் தீராத மர்மங்களாக தொடரும் இன்றைய நிலையில், அவை தொடர்பான விசாரணைகள் மேலும் துரிதப்படுத்தப்பட்டு கஹவத்தை பகுதியில் இடம்பெறும் மர்மக் கொலைகளின் சூத்திரதாரர்கள் பற்றிய உண்மை தகவல்கள் விரைவில் துலங்க வேண்டும். இன்றைய நிலையில் அனைவரினதும் எதிர்பார்ப்பும் அதுவே.

**- வசந்தா அருள்ரட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெயகாந்தனிடம் 10 கேள்விகள்

**1. எழுத்துத் துறைக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?**

நான் வரவில்லை, எங்கோ போய்க் கொண்டிருந்த வழியில், எழுத்தாளனாக வரவேற்கப்பட்டேன். நான் கதைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பியதில்லை. என்னைப் பத்திரிகைகள் ஆதரிக்கவில்லை என்று புலம்பியதுமில்லை. நான் கல்லூரியிலோ, உயர்நிலைப் பள்ளியிலோ படித்தவனல்ல, அங்கே எழுத்தையோ இலக்கியத்தையோ கற்பதற்கு! நான் நடைபாதையில், குழாயடியில், சில நாள்கள் வேலைக்குப் போன சிறிய தொழிற்சாலைகளில் பொதுவான நடைமுறை வாழ்க்கையில்தான் இலக்கியத்தைக் கற்றேன். பிறகு, அங்கேதான் எழுத்தும் இலக்கியங்களுமே பிறக்கின்றன என்று அறிந்தேன். அறிந்ததை - வாழ்க்கை எனக்கு அறிவித்ததை - திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். வந்தவன்தான் போவான். நான் வந்தவனும் இல்லை; போகிறவனும் இல்லை!

**2. ஓர் எழுத்தாளன் எழுத்தை மட்டுமே நம்பிப் பிழைக்க முடியும் என்று நம்புகிறீர்களா?**

பிழைப்பு என்றாலே ரொம்பச் சிரமமான காரியம்தான். 'என்ன பிழைப்பு? என்பது அலுப்புக் குரல். இலக்கணப்படி பார்த்தால், பிழைப்பு என்பது குற்றம் என்றும் பொருள்படும். எழுத்தை வெறும் பிழைப்பாகக்கொள்வது ஒரு குற்றமே. பிழைக்க முடியுமா என்பதல்ல; கூடாது என்பது என் கொள்கை. என்னைப் பொறுத்தவரை எழுதுவதற்கு எனக்குக் காசு தருகிறார்கள். ஆனால், நான் எழுதுவதே காசுக்காக அல்ல. கல்லடி கிடைத்தாலும் நான் எழுதுவேன். எழுத்து, காசு தராவிட்டால்தான் என்ன? பிழைப்புக்கு வேறு ஏதேனும் தொழில் செய்வேன். எழுத்து எனக்கு சீவனமல்ல; அது என் ஜீவன்!

**3. தனித் தமிழில் எழுதுவது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

அதில் யாரும் எழுதுவதில்லையே! எழுத வேண்டும் என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஆசைக்கு ஒரு கடிதம், ஒரு கட்டுரை எழுத சிலர் முயலலாம். கதை எழுத முடியாது. கதை என்பது, இன்றைய வாழ்வின் பிரச்சினை. இந்த இருபதாம் நூற்றாண்டுத் தமிழனுக்குப் பிரச்சினை, தமிழின் தனிமையல்ல!

**4. தங்கள் மனத்தைக் கவர்ந்த எழுத்தாளர் யார்? விமர்சகர் யார்?**

கவர்ச்சி என்பதே ஒன்றின் வளர்ச்சி பற்றிய பிரச்னை. சின்னப் பிள்ளைக்கு, மண் பிடிக்கும், வாலிபனுக்கு, பெண் பிடிக்கும். வயது முதிர்ந்தால் அவரவர் வளர்ச்சிக்கு ஏற்ப கவர்ச்சிகள் பேதப்படும். அதே போல் எனது ரசனை வளர்ச்சிக்கு ஏற்ப ஒவ்வொரு காலத்தில், ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொருவரைப் பிடித்திருந்தது; பிடிக்கிறது. ஏதோ நீங்கள் கேட்டதற்காகச் சொல்வது என்றால், டால்ஸ்டாய் என்பேன். இந்தக் கவர்ச்சிக்குக் காரணம் கேட்பீர்களோ? என் வளர்ச்சிதான். விமர்சகரா? நானறிந்தமட்டில் அப்படி ஒருவர் இங்கே இல்லை ஐயா.

**5. நீங்கள் ஏன் தொடர் கதைகள் எழுதுவதில்லை?**

நான்தான் தொடர்ந்து கதை எழுதி வருகிறேனே! தொடர் கதை என்று இலக்கியத்தில் ஒரு பிரிவு கிடையாது. மேல் நாட்டில் மிகப் பெரிய எழுத்தாளர்களின் நாவல்களைக்கூட சில பத்திரிகைகள் வசதிக்காக அவ்விதம் பிரசுரித்தது உண்டாம். எனினும், அவை தொடர் கதைகள் என்பதற்காகப் பாராட்டப்படவில்லை. இங்கேயோ அது பெரும்பான்மை வாசகரை மயக்கும் ஒரு தந்திரமாகவே கையாளப்பட்டு வருகிறது. பத்திரிகைகளோ, வாசகரோ என்னிடம் அதை எதிர்பார்க்கவில்லை. எனக்கும் அதில் பழக்கமோ, விருப்பமோ இல்லை!

**6. ஜனரஞ்சகமாக எழுதக் கூடாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

ஆம். ஜனங்கள் வளர்ந்துகொண்டே இருப்பவர்கள். வளர்ந்துகொண்டிருக்கும் ஒன்றின் அருகே குறிப்பிட்ட ஒரு வளர்ச்சிக்குச் சமமாகப் போய் நின்றுவிட்டால், நாளைக்கு நாம் குறைந்துவிடப் போகிறோம் என்று அர்த்தம். ஜனங்களை விட்டு ஒதுங்கிவிடவும் கூடாது; கலந்துவிடவும் கூடாது. எப்போதும் ஓர் அடி முன்னே சென்றால்தான் ஜனங்களை இழுத்துச் செல்லவும் முடியும். அவர்கள் எதை வேகமாக விரும்பி ஏற்கிறார்களோ, அதை அவர்கள் அதே வேகத்தோடு வீசியும் எறிகிறார்கள். ஜனரஞ்சகம் என்ற பெயரால் என் எழுத்துக்கள் எறியப்பட வேண்டாம் என்றும் நான் நினைக்கிறேன்!

**7. தாங்கள் ஏதேனும் அரசியல் கட்சியில் பங்கு கொண்டிருக்கிறீர்களா? அதனால் உங்கள் எழுத்து பாதிக்கப்படுகிறதா?**

நான் ஒரு கம்யூனிஸ்ட். வாழ்க்கையின் எத்தனையோ பாதிப்புகளினால்தான் எழுத்தே உருவாகிறது. பாதிக்கட்டுமே!

**8. ஓர் எழுத்தாளன் என்ற முறையில் தமிழ்ப் பட உலகைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?**

நான் தமிழ்ப் படம் பார்த்து மூன்று வருஷம் ஆகிறது. ஓர் எழுத்தாளன் என்ற முறையில் அபிப்பிராயம் சொன்னால்... வேண்டாம் சார், விடுங்கள்!

**9. திரைப்படங்கள் எதற்கேனும் எழுத உத்தேசித்திருக்கிறீர்களா?**

எழுத உத்தேசமில்லை; எடுக்க உத்தேசம் உண்டு. அப்போது ஒருவேளை எழுதலாம்!

**10. உங்கள் மாத வருமானம் என்ன? அது போதுமானதாக இருக்கிறதா? இல்லையென்றால் பற்றாக்குறைக்கு என்ன செய்து சமாளிக்கிறீர்கள்?**

வாழ்க்கை ஐம்பது ரூபாயிலும் இருக்கிறது, நூறு ரூபாயிலும், ஆயிரம் ரூபாயிலும் இருக்கத்தான் செய்கிறது. நான் வாழ்க்கை வண்டியில் எல்லா 'கிளாஸ்'களிலும் பிரயாணம் செய்திருக்கிறேன். இன்றைக்கு எனக்கு ரூ.350இல் தாங்குகிறது. நாளைக்கு முடியாவிட்டால், வேறு 'கிளாஸ்'க்கு இறங்கி விடுகிறேன். முடிந்தால் உயரே போவது. ஆனால், கடன் வாங்க மாட்டேன். பொருளாதார வாழ்க்கை என்பது, வாழத் தெரிந்தவர்களுக்கு ரொம்பச் சாதாரணமானது. பொருளாதார வீழ்ச்சியும் சரி, உயர்வும் சரி ஓர் எழுத்தாளனின் வீழ்ச்சியோ உயர்வோ ஆகாது. அவை யாவும் அனுபவங்கள் அல்லவா? எனக்குப் பிரச்சினை, என்னுடைய ஆன்மிக வாழ்க்கையும், பிறருடைய சமூக வாழ்க்கையும்தான். பிரசினைகளுக்குப் பற்றாக்குறை ஏது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

**27.05.2015 –02.06.2015**

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

அனைவரிடமும் நட்புடன் பழகுவீர்கள். குடும்பத்தின் முக்கிய தேவையை நிறைவேற்றுவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். புத்திரர் உடல்நலனுக்காக பணச் செலவு செய்ய நேரிடும். நிலுவைப்பணம் வசூலாகும். இல்லறத் துணையின் ஆலோசனை, வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப பலன் காண்பீர்கள். பணியாளர்கள், நேரம் தவறாமையை பின்பற்றுவது நல்லது. பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள், புதியவர்களின் நட்பை பெறுவர்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

செயல்களில் உரிய திட்டமிடுதல் அவசியம். வார்த்தையின் இனிமையால் நல்லவரின் நட்பை பெறுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. இதமான அணுகுமுறையால் புத்திரரை நல்வழிப்படுத்த முயல்வீர்கள். இல்லறத் துணையின் ஆதரவால் ஒற்றுமை சிறக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் லாபத்தை உயர்த்துவீர்கள். பணியாளர்கள், பணிச்சுமையை சந்தித்தாலும் ஆதாயம் காண்பர். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள், பெற்றோரின் கருத்துக்கு மதிப்பளிப்பர்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சமூகத்தில் நற்புகழுடன் விளங்குவீர்கள். பணவரவு திருப்திகரமாகும். விரும்பிய ஆடம்பரப் பொருளை வாங்குவீர்கள். தாயின் ஆசியால் உற்சாகம் காண்பீர்கள். புத்திரர், உங்கள் சொல் கேட்டு நடப்பர். ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத் துணையுடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வியத்தகு வளர்ச்சி பெறும். பணியாளர்கள், சுதந்திரமாகப் பணியாற்றுவர். பெண்கள், நினைத்ததை சாதித்துக் காட்டுவர். மாணவர்கள், பொது அறிவில் மேம்படுவர்.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உடன் பிறந்தவர்களுக்கு சுபநிகழ்ச்சி நடத்த யோகமுண்டு. வாகன பயணம் இனிய அனுபவத்தைத் தரும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். எதிரியிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. இல்லறத் துணையின் அன்பை கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி செய்வீர்கள். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள் மனதில் ஆன்மிக எண்ணம் உண்டாகும். மாணவர்கள், நண்பர்களின் பாராட்டை பெறுவர்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

வீடு, வாகனத்தின் பாதுகாப்பு விஷயத்தில் அக்கறை கொள்வது நல்லது. புவருமானம் அதிகரிப்பதால், பணக்கடன் தீரும். இல்லறத் துணையால், குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழில், வியாபாரம் அமோக வளர்ச்சி பெறும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள், விழிப்புடன் செயல்படுவது நல்லது.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

புத்திரர்கள், கடமையை உணர்ந்து செயல்படுவர். எதிரிகள் பலமிழந்து போவர். இல்லறத் துணையின் செயலை குறை சொல்வதை தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் சேரும். பணியாளர்கள், குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள், பணப்பொறுப்பு ஏற்பது கூடாது. மாணவர்கள், மனஉறுதியுடன் செயல்பட்டு முன்னேறுவர்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வருமானம் உயரும். உடன் பிறந்தவர்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். வாகன பயன்பாடு சீராக இருக்கும். புத்திரரின் குறைபாட்டை சரிசெய்வீர்கள். இல்லறத் துணை கூடுதல் அன்பு, பாசம் கொள்வார். தொழிலில் சீரான வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை தாமதமாகும். பெண்கள், உறவினரால் மதிக்கப்படுவர். மாணவர்கள், புதிய கல்வியாண்டை எதிர்நோக்கி காத்திருப்பர்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

செயலில் முழுஅளவில் வெற்றி உண்டாகும். குடும்பத்தில் சுபநிகழ்வு நடந்தேறும். உறவினர் மத்தியில் செல்வாக்கு கூடும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர், நற்செயலால் பெருமை சேர்ப்பர். எதிரி தொல்லை விலகும். இல்லறத் துணை, கருத்து ஒற்றுமை கொள்வார். தொழில், வியாபாரம் படிப்படியாக முன்னேற்றம் பெறும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், புதிய கல்வியாண்டிற்கு தயாராவர்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

புதிய திட்டங்களை பரிசீலித்து செயல்படுத்தவும். வாகனத்தில் மிதமான வேகம், பயண முறையை எளிதாக்கும். புத்திரர் விரும்பிய பொருட்களை வாங்கித் தருவீர்கள். தொழிலில் போட்டியாளர்களின் எதிர்ப்பை சமாளித்து, வெற்றி காண்பீர்கள். இல்லறத் துணையின் தவறுகளை, அன்பினால் சரிசெய்வீர்கள். தொழிலில் சீரான வளர்ச்சியும், லாபமும் இருக்கும். பணியாளர்கள், சலுகை பெறுவதில் தாமதம் உருவாகலாம்.

### மகரம்

**திருவோணம், அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

பணியில் புத்துணர்வுடன் ஈடுபடுவீர்கள். வாகன பயணம் இனிதாக அமையும். புத்திரர், எதிர்கால நலனுக்காக ஆலோசிப்பீர்கள். இல்லறத் துணையின் உடல் நலனில் அக்கறை தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் கண்காணிப்பு நன்மை தரும். பணியாளர்கள், அதிக பொறுப்புணர்வுடன் பணிபுரிவது அவசியம். பெண்கள், உறவினர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவது கூடாது. மாணவர்கள்,

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

நிகழ் கால அனுபவம், புதிய படிப்பினை அளிக்கும். வெளியூர் பயணத்தை, பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. புத்திரர் நற்செயல்களால், குடும்பநலன் பாதுகாக்கப்படும். உடல்நலம் சீராகும். இல்லறத் துணை இன்ப, துன்பங்களில் சமபங்கு கொள்வார். தொழில் மாற்றங்களை உரிய தருணங்களில் மேற்கொள்ளலாம். பணியாளர்கள், பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள், வீட்டு செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள், பொழுதுபோக்கில் ஈடுபடுவர்.

### மீனம்


**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். உடன் பிறந்தவர்களின் அன்பு, ஆதரவு கிடைக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்புப் பணி மேற்கொள்வீர்கள். வீட்டில் மங்கல நிகழ்ச்சி நடந்தேறும். எதிரியும் பாராட்டும் விதத்தில் புதிய சூழல் உருவாகும். இல்லறத் துணை, குடும்பத்தின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வார். தொழிலில் லாப விகிதம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணி இலக்கை எளிதாக நிறைவேற்றுவர்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 87

அடேல் பாலசிங்கம்



மற்றவர்களுக்கு இப்படி நடப்பது பற்றி அவர்கள் இதற்கு முன் படித்திருக்கலாம். அல்லது கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் காவல்துறையின் இத்தகைய அடாவடித்தன நடவடிக்கைக்கு தாமும் உள்வாங்கப்படலாம் என்று அவர்கள் கனவு கூடக் கண்டிருக்க மாட்டார்கள். தமிழ்நாடு காவல்துறை பற்றிய அவர்களுடைய மதிப்பு , தரம் இறங்கியிருக்கும் என்பது இயல்புதானே! காவற்றுறையினர் எதைத் தேடுகின்றார்கள் என்பது எமக்கு இன்னமும் புதிராகவே இருந்தது. ஏனென்றால் தமது வீடு, ஆயுத பதுக்கலுக்காக என்றுமே பயன்படுத்தப்படவில்லை. வீட்டுக்கு வெளியே, காவல்துறை வாகனங்களும், ஆளணிகளும் பெருந்திரளாக அந்தப் பகுதியை ச் சுற்றி வளைத்துக் காவலிட்டன. விடுதலைப் புலிகளின் வீடுகள் அனைத்திலும் கடும் தேடுதல் நடப்பது தெரிந்தது. மாநிலத்தில் உள்ள போராளிக் குழுக்களின் அனைத்துப் பாசறைகளும் முழுமையான அதிகாலைச் சோதனைக்கு உள்ளாகி இருந்தன. எமது வீட்டுச் சோதனையின் முடிவில் எனது தனிப்பட்ட பாதுகாப்புக்காக இருந்த கைத்துப்பாக்கி ஒன்று மட்டுமே அவர்கள் கையில் அகப்பட்டது. எனினும் காவல் நிலையத்துக்கு தம்முடன் வருமாறு அவர்கள் பாலாவைக் கேட்டார்கள். உள்ளூர் காவல் நிலையத்தில் பாலாவைப் படம் பிடித்தார்கள். கைரேகை பதிவு செய்தார்கள். சொல்லொணா அவமானத்துக்கும் சிறுமைக்கும் உள்ளாக்கினார்கள். இதே சூழ்நிலையில் பிரபாகரன் அழைத்துச் செல்லப்பட்டு அந்தச் சிறுமைப்படுத்தும் சடங்குக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். பல மணி நேர விசாரணைக்குப் பின் அவர்கள் இருவரும் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டார்கள். ஆனாலும் உடனடியாக வீட்டு மறியலில் நிறுத்தப்பட்டார்கள். எம்மைச் சந்திக்க எவரும் வரலாம் என்று அனுமதித்தார்கள். ஆனால் பாலா மட்டும் வீட்டை வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை. பிரபாகரன் மீதும் அதே நிபந்தனைகள். இவையெல்லாம் பாலாவின் பாதுகாப்புக்காகவே என்று அவர்கள் நியாயம் கூறினார்கள். ஆனால் ஏற்கனவே படுகொலை முயற்சிக்கு இலக்காகி இருந்த பாலாவுக்கு யாரிடமிருந்து பாதுகாப்பு அல்லது ஏன் பாதுகாப்பு என்பதை அவர்கள் விளக்கிக் கூறத் தவறிவிட்டார்கள்.

பாலாவும் சரி, பிரபாகரனும் சரி இதனால் கொதிப்படைந்தார்கள். தாம் அவமானப்படுத்தப்பட்டதாக அவர்கள் கருதினார்கள். தமிழ் நாடும் புதுடில்லியும் வேண்டுமென்றே தம்மை அச்சுறுத்தி அவமானப்படுத்துவதாக எண்ணினார்கள். மாநில, மற்றும் மத்திய அரச அதிகார பீடங்களுக்குத் தெரியாமல் இத்தகைய பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை நம்ப, நாம் எவரும் முட்டாள்களல்லர். விடுதலைப்புலிகளுக்கும் புதுடில்லிக்கும் இடையே அரசியல் வேறுபாடு அடிக்கடி தலைதூக்கிய போதிலும் இத்தகைய காவல்துறைக் கடும் நடவடிக்கை இடம்பெற்றிருக்கக் கூடாது என்பதே விடுதலைப்புலிகளின் கருத்தாகும். பாதுகாப்பு பதகளிப்பு ஏதாவது இருந்திருந்தால் அதைப்பற்றி விவாதித்து பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். விடுதலைப் புலிகளுக்கும் புலித்தலைவர்களுக்கும் எதிரான கடும் நடவடிக்கை பாலாவையோ பிரபாகரனையோ காவல்துறைப் புலனாய்வுப் பிரிவினர் ஆழமாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே சுட்டிக் காட்டியது.

(பதிவு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சவூதியில் திருமணங்கள் தாமதப்படுவது ஏன்?

- எம்.எஸ்.ஷாஜகான்

**வ**ரதட்சனை சீதனப் பிரச்சினை தான். ஆனால் இங்கு மாப்பிள்ளையின் தாயார் 'பென்ட்லி கார்' ((Bentley) (பென்ஸ் காரைவிட விலை அதிகம்) கேட்பதில்லை.

'பிரைவேட் ஜெட்' வேண்டும் என்று அடம் பிடிப்பதில்லை. மாறாக பெண்ணின் தாயார் கேட்பது. இஸ்லாமிய வரதட்சனை முறை தான்.

பெண்ணிற்கு தான் பொன் கொடுக்க வேண்டும். அடடா நாமும் அந்த பகுதியில் பிறந்திருக்கலாமே என்று நம் பெண்கள் சிலர் பெருமூச்சு விடலாம்.

திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணிற்கும் இடையே ஏற்படும் பந்தம் உறவு என்று மட்டும் அராபிய கலாசாரம் பார்ப்பதில்லை.

மாறாக அது இரு குடும்பங்களின் இணைப்பாகவே கருதப்படுமேயன்று பெண்களுக்கு 15, 16 வயதே திருமண வயதாக கருதப்பட்டது. 20 வயதில் ஓரிரு குழந்தைகளுக்கு தாயாகி விடுவர். தாயும் மகளும் ஒரு குடும்பத்தில் ஒரே நேரத்தில் குழந்தை பெறுவது அன்று சாதாரணம்.

மகனுக்குப் பெண் தேடும் தாயார் பிற திருமணங்களுக்கு வரும் இளம் பெண்களையும் நோட்டம் விடுவார்.

மணமகன் தெரிவில் அவனது நற்குணம், அவனது வம்சம், குலம், சமூக அந்தஸ்து முதலியன பிரதானமாக கவனத்திற்கு எடுக்கப்படும். பின்பு இரு குடும்பத்தாரும் மணமகளுக்கு வரவேண்டிய சீதனம் பற்றிப் பேசுவர்.

அன்றைய அராபியர் தங்கம், வெள்ளி, ஒட்டகம், பட்டு, பலவித அத்தர் மற்றும் வாசனைத் திரவியங்களைக் கேட்பர்.

இன்றைய கணனி உலகில் காலத்திற்கேற்ப பொருட்களைக் கேட்பதோடு ரொக்கமாக பெரும் பணமும் கேட்கின்றனர். திருமண விருந்து வைபவங்களுக்கும் பெரிய அளவில் செலவழிக்க வேண்டி உள்ளது.

அடிப்படை நோக்கம் தனது மகளை வசதியான குடும்பத்தில் சேர்க்க வேண்டும் என்பதோடு, எவ்வளவு அதிகம் சீதனம் வாங்குகிறார்களோ மாப்பிளை வீட்டார் எவ்வளவு அதிகம் செலவளிக்கிறார்களோ அவ்வளவிற்கு மணப் பெண்ணின் மதிப்பு கூடும். பெற்றவர்களுக்கும் அது பெருமையைத்தரும்.

இவர்கள் சொந்தத்திற்குள்ளேயே திருமணம் செய்ய அதிகம் விரும்புவர். காரணம் சொத்து வெளியே செல்லாததோடு அது இரட்டிப்பாகும் என்பதால். 'பொருளில்லார்க்கு பெண் இல்லை' என்பதே அன்றும் இன்றும் சவூதியில் யதார்த்தம்.

மணமகளிடம் வரதட்சினை வாங்கும் பழக்கம் உள்ள இந்திய உபகண்ட நாடுகளைத் தவிர்த்து, உலகின் பல நாடுகளில் மணமகனே அனைத்து திருமண செலவுளையும் செய்யும் வழக்கம் உண்டு.

சீனா, ஜப்பானில் சில காதலர்கள் வருடக் கணக்கில் காதலித்துக் கொண்டு இருப்பார்கள். அவர்களுக்கு பெற்றோர்களின் ஆசியும் இருக்கும். கேட்டால், திருமண விருந்திற்கு, புதுக் குடித்தனம் போவதற்கு காசு சேர்த்துக் கொண்டு இருக்கிறேன் என்பார் காதலர். காதலியும் ஆமாம் என்பார்.

லைலா மஜ்னு கதையை நம்மில் பலர் அறிந்திருப்பார்கள். அது கதையல்ல நிஜம். இதில் காதலி லைலா என்றும் காதலன் மஜ்னு என்றும் தான் பெயர் குறிப்பிடப்பட் டிருக்கும்.

தவறு. காதலனின் உண்மை பெயர் இப்னு அல் முலவ்வாஹ் இப்னு முசாஹிம் என்பதாகும். ஏழாம் நூற்றாண்டில் நடந்த சம்பவம் இது.

ஆடு மேய்ப்பவனாகவும் கவி பாடுவதில் வல்லவனாகவும் இருந்த முசாஹிம் தனது குலத்தைச் சேர்ந்தவளும் சிறு வயது சிநேகிதியுமான அழகி லைலா பின்த் மஹதி இபுன் சய்யத் மீது காதல் கொண்டான்.

ஆனால் லைலாவின் குடும்பத்தவர் அவன் பொருளாதார ரீதியில் சிறந்தவன் அல்லன் என்று மறுத்து, அவளை ஏற்கனவே வேறொரு இளைஞனுக்கு ஒப்பந்தம் செய்து விட்டோம் என்று கூறவே மனமுடைந்த முசாஹிம் ஊர் ஊராக பாலைவனத்தில் பைத்திய மாக சுற்றி மரணமடைந்தான்.

திருமணமான லைலாவால் முசாஹிம்மை மறக்க முடியாது தடுமாறினாள். நோயுற்றாள். அவள் கணவன் அவளை ஈராக்கிற்கு சுமந்து சென்றான். அங்கு அவள் மரணமானாள்.

லைலாவையே நினைத்து பைத்தியமாகி சுற்றியதால் முசாஹிம், 'மஜ்னு'(பைத்தியக்காரன்) என்று அழைக்கப்பட்டான். அதுவே அவனது பெயராகவும் மாறிவிட்டது.

சமீபத்தில் மன்னர் அப்துல் அசீஸ் பல்கலைக்ழகம் நடத்திய ஆய்வு ஒன்றின்படி, சவூதியில் பெரும்பாலான ஆண்களும், பெண்களும் 30 வயது வரை பொறுத்திருக்கிறார்கள்; பொருத்தமான துணை கிடைக்கும் வரை, அல்லது திருமணமே வேண்டாம் என்று தனித்து வாழத் துவங்கி விடுகிறார்கள் என்று அல் ஷரக் என்ற பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

திருமணத்தைப் பற்றி பல விதமான தவறான கருத்துக்கள் மக்களிடையே இருப்பதால் சவூதியில் சுமார் 20 லட்சம் பெண்கள் திருமணம் செய்யாது தனித்து வாழ்கிறார்களாம்.

30 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் 33.4% வீதத்தினர் திருமணம் செய்ய வில்லை. பெற்றோரோடு வசிக்கும் பெண்களுக்கு வீட்டில் செல்லம் அதிகம். தனி அறை, தனி வேலைக்காரி என்ற சொகுசு வாழ்க்கை உண்டு.

திருமணம் வேண்டாம் என்று கூறுவதற்கு ஆறு விடயங்கள் முக்கியமானவையாக இருக்கின்றவாம்.

அவை போக, தொழில் குறிக்கோள், சமூக அந்தஸ்து குறைவு, சில உடல் அல்லது மனப் பிரச்சினை, குடும்ப பொறுப்பு எடுப்பதில் இருக்கும் பயம், தாம் அறிந்த வேறு தம்பதிகளின் தகராறுகள், அல்லது சகோதர நண்பிகளின் மணமுறிவு, மகிழ்ச்சி இல்லா வாழ்க்கை போன்றவைகளும் இளவயதினரிடம் திருமண ஆசையை இல்லாமல் ஆக்கிவிடுகிறது என்கின்றனர்.

சில பெண்கள் குழந்தைப் பருவத்தில் இருந்து தாங்கள் வளர்ந்த சூழலில் மாற்றத்தைக் காண விரும்புவதில்லை.

புதிய குடும்பம், புதிய மனிதர்கள் என்று பரீட்சித்துப் பார்க்கப் பயப்படுகிறார்கள். மேலும் பெண்கள் இன்று கல்வி கேள்விகளிலும் பல தொழில் துறைகளிலும் முன்னேறி இருப்பதால், அன்று 15 வயதில் பெற்றோர் சொல்லியவனுக்கு கழுத்தை நீட்டியதுபோல் இன்று அவர்கள் அதற்குத் தயாரில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக குடும்பப் பொறுப்பு என்று ஒன்று இல்லை. மனைவி இலக்கம் ஒன்றுக்குமேல் போவதை பட்டம் படித்த பெண்கள் பலர் அவ்வளவாக விரும்புவதில்லை.

ஆகவே கன்னிய ராக வாழ்வதை அவர்கள் குறையாக நினைப்பதும் மில்லை. இந்நிலை பெற்றோர்களையும் அரசையும், ஒரு பெண்ணின் பிந்திய நாட்களை நினைத்து கவலை அடையச் செய்துள்ளது என்பதே உண்மை.

இதேவேளை சவூதியில் இப்போது திருமணத்துக்கு முன்பு மருத்துவ சான்று பெற வேண்டும் என்பது கட்டாய மாக்கப்பட்டுள்ளது.

இதன்படி திருமணம் நிச்சயிக்கப்பட்ட ஆணும் பெண்ணும் இரத்த பரிசோதனைக்கு உட்படுத்தப் படுகிறார்கள். தனிப்பட்ட முறையில் அவர்களது தேக ஆரோக்கியம் பல முனைகளில் அறிந்த அறியாத பல நோய்களுக்காகப் பரிசோதிக்கப்படுகிறது.

பின்பு இருவரது இரத்தமும் ஒத்துப்போகிறதா, பிறக்கும் குழந்தை எந்த உடல் பாதிப்பும் இல்லாமல் பிறக்குமா என்று சோதிக்கப்படுகிறது.

இதுகுறித்து பலருக்கு எதிர்முனை பதிலே கிடைக்கிறது. 65% விகிதமான நிச்சயிக்கப்பட்ட ஜோடிகள் தங்கள் இரத்தம் பொருந்தவில்லை என்று திருமணத்தை நிறுத்தி விடுகிறார்கள்.

திட்டமிடல் அமைச்சின் தகவல்படி 14 இலட்சம் ஆண்களும் 6 இலட்சம், பெண்களும் தாமதமாக 30 வயது அளவிலேயே திருமணம் செய்துள்ளனர்.

ஆண்களில் பெரும்பாலானோரின் பொருளாதாரச் சுமையே திருமண தாமத்திற்கு முக்கிய காரணம் என்கின்றனர். சவூதி ஆண்கள் தங்கள் நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்வதையே அதிகம் விரும்புகிறார்கள்.

ஆனால் அவர்கள் எட்டாக்கனியாக மாறியதும், இவ்வாறு பொருளாதார வசதி குறைந்த இளைஞர்கள் தங்களுக்கு சொந்த நாட்டில் பெண் கிடைப்பது கஷ்டம் என்று முடிவு கட்டி வேறு அரேபிய நாடுகளில் உள்ள பெண்களைத் திருமணம் செய்கிறார்கள்.

இதனை அரசு பெரிய அளவில் விரும்பவில்லை. மாற்று வழிகளைத் தேடுகிறது. அரசு பொறுப்பில் கூட்டு திருமணங்களைச் செய்யலாமா என்றும் யோசிக்கிறார்கள்.

அரசு ஏடுக்கும் முயற்சிகளால் சவூதியில் தாதமாகும் திருமணங்கள் விரைவு படுத்தப்படுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பாக்க வேண்டும்.

***

**ஆண்களில் பெரும்பாலானோர் பொருளாதாரச் சுமையே திருமண தாமத்திற்கு முக்கிய காரணம் என்கின்றனர். சவூதி ஆண்கள் தங்கள் நாட்டு பெண்களைத் திருமணம் செய்வதையே அதிகம் விரும்புகிறார்கள்.**

**ஆனால் அவர்கள் எட்டாக்கனியாக மாறியதும், இவ்வாறு பொருளாதார வசதி குறைந்த இளைஞர்கள் தங்களுக்கு சொந்த நாட்டில் பெண் கிடைப்பது கஷ் டம் என்று முடிவு கட்டி வேறு அரேபியா நாடு களில் உள்ள பெண்களைத் திருமணம் செய்கிறார்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 மே 27ஆம் திகதி வெளியிடப்பட்டது.